ஓம்

திருச்சிற்றம்பலம்.

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.


சிலம்பு ௨. } மெய்கண்டான் ஆண்டு-௭௱௧ ஆடித் திங்கள் 1924௵ ஜூலை—ஆகஸ்டு௴ { பரல் ௭.


திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

## திருவள்ளுவர்

இச் சொல் திருவள்ளுவனாரையும் அவர் இயற்றிய பொதுமறைச் செந்தமிழ்ப்பெரு நூலையுங் குறிக்கும். ஈண்டு பின்னையதைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். இந்நூலின் பல்வகை நயங்களுள், பண்டைத் தனித் தமிழ் நூலின் அமைப்பு முறையைத் தழுவிச் செல்லும் சால்பு மிகவும் உற்று நோக்கத் தக்கது. தமிழ் நூற் போக்குத் தெரிந்தோரே அதனை நன்குணர்வர். ‘அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் அன்பின்திற னறிந்தேம் வீடு தெளிந்தேம்’ என்று ஓர் பெரும் புலவர் கூறிய வண்

ணம் உயிர்க்குறுதி பயப்பதாகிய அறம்பொரு ளின்பம் வீடென்னும் நான்கினையும் நூற்பொருளாக முறையே எடுத்து விளக்கும் மரபு பண்டைத் தமிழ் நூல் வழக்கேயாம்.

வடநூலார் தருமம் அருத்தம் காமம் மோக்ஷம் என்பதனை மக்கள் பெறுதற்குரியா ரென்ற கொள்கையினை உடையவரே எனினும் 'அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்றபடி தமிழர் கருதிய வண்ணம் அவற்றை நூற் பயனாக எண்ணி தமது நூலமைப்பினை அம்முறைக் கேற்ப வகுத்துக் கொள்ளவில்லை. அவர் அவற்றைப் புருஷார்த்தம் என்பதே யன்றி 'நூற் பயன்' என்று கூறுவதில்லை. தமிழிலுள்ள எந்நூலுள்ளும் பழமை மிக்க தொல்காப்பியத்திலும் அதற்குப் பின் வந்த பண்டை ஒழுக்க நூல் பலவற்றுள்ளும் இந்நாற் பொருளுமாதல் முதல் மூன்றுமாதல் வெளிப்படையாக விதந்தோதப்பட்டுள்ளன. ஆனால் வடமொழிக்கண்ணே பண்டைப் பெருநூலாகிய நான்கு வேதங்கள், மிருதி நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றுள் நாற் பொருளையும் நிரல்பட வகுத்துக் கூறும் வழக்கு காணப்படாமையால் அது தமிழ்க்கே சிறந்த முறையென்பது போதரும். இம்முறை முதல் முதல் பண்டைத் தமிழ் நான் மறைக்கண் வகுத்துக் காட்டப்பட்ட தென்பது 'அறம் பொருளின்பம் வீடு மொழிந்த வாயான்' எனவும் 'மறை நான்கும் கல்லால் நிழற் கீழ்ப் பன்னிய எங்கள் பிரான்' எனவும் 'மூதாருலகில் முனிவருடனாய் அறநான் கருள்செய்தாய்' எனவும் வரும் தேவார அடிகளின் பொருளை உற்று நோக்குவார்க்கு இனிது விளங்கும்.

ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்த நூல்கள் ஒன்றும் இப்பொழுது இருப்பதாய்த் தெரியவில்லை. அவற்றோடு பண்டை நான்மறையும் மறைந்த பின்பு தமிழ் நன்மக்கள் உண்மை யுணர்ந்து மெய்ந்நெறி தலைப்படுதற்கு வழி காட்ட வந்த நூல்களுள் முதன்மையுடையதாக இன்னும் நின்று நிலவுவது ஆசிரியர் திருவள்ளுவ ரியற்றிய பொய்யா மொழியே யாம். பண்டைத் தமிழ் மறை இல்லாக் குறையை நிறைவு செய்வான்

எழுந்த இந்நூலானது தான் தோன்றிய கால வியல்பினுக்கு ஏற்றவாறு அமைந்திருத்தல் அந்நூற்போக்கினை யுணர்வார்க்குத் தெள்ளிதிற் புலனும்.

இந்நூல் இன்ன காலத்தே எழுந்ததென்று திட்பமாகக் கூறுவதற்கு வேண்டும் சான்றுகள் நன்கு கிடைத்தில எனினும் எந்நூற்குப் பின்னும் எந்நூற்கு முன்னும் இஃது இயற்றப்பெற்றது என்று ஊகிக்க இடமுண்டு. தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்தது திருவள்ளுவர் என்பது, முன்னையது இடைச் சங்க நூலாகக் கூறப்படுதலும் பின்னையது கடைச் சங்கத்தார் காலத்து எழுந்ததாகத் தெரிதலும் ஆகிய காரணம் பற்றியும், முன்னையதின் போக்கு மிக்க பழமை படைத்ததாயும் பின்னையது அங்ஙனமிலதாகவும் காணப்படுதல் பற்றியும், பிற பல்லாற்றானு முணரப்படும். சரித்திர ஆசிரியர் கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகட்கு முன்னர் இந்நாட்டில் பன்னிரண்டாண்டு பஞ்சம் நீடித்திருந்ததென்று கூறுவதாலும் அப்பஞ்ச முடிவில் எழுந்த இறையனாரகப் பொருள் உரையுள் திருவள்ளுவர் நூல் மேற்கோள் காணப்படுதலாலும் கி. மு. முன்னூறுக்கு முன்னரே திருவள்ளுவர் நூல் எழுந்து நிலவி யிருத்தல் வேண்டும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த மணிமேகலையுள் திருவள்ளுவர் மொழி விதந்தோதப்படுதலால் அதற்கு முற்பட்டதென்பதும் தெளிவு.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை யென்ற
பொய்யில் புலவன் பொருளுரைதேறாய்"

என்றது மணிமேகலை.

திருவள்ளுவர் நூலுள் புத்தர், ஜினர் முதலியோரது பெயர்களை யாண்டும் கண்டிலம். திருமால் பெயர் காணப்படினும் அது கடவுட் கொள்கைச் சார்பாக நிகழவில்லை.

'மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான், றாஅய தெல்லா மொருங்கு' என்றவிடத்து உயர்வு நவிற்சிக்காக திருமால் கதை

எடுத்துக் கொள்ளப்பட்டது. அடியளந்தான் தாவியதெல்லாம் முயற்சியுடைய ஓர் உயிரானது பெறும் எனவே அத்தெய்வத்தினது அளவிலாற்றலை அச்செய்யுள் சிறப்பித்ததாகத் தோன்றவில்லை. செய்யுள் நயம் பற்றி அவ்வாறு கூறினும் அடியளந்தானுக்கு வணக்கம் ஆண்டு மொழியப்படவில்லை. 'தாம் வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ, றாமரைக் கண்ணா னுலகு' என்ற செய்யுளிலும் தாமரைக் கண்ணன் என்னும் சொற்றொடர் திருமாலைக் குறிப்பதாகக் கருதுமிடத்து அவராற் பெறப்படும் இன்பம் ஓர் உலகத்ததா மெனக் கூறவே அது வரம்பிலின்பமாம் என்பதற்கு இடமில்லை.

இல்லற வாழ்க்கையின் பயனாக வானவருலகமும், யானென தென்னும் செருக்கு அறுதலின் பயனாக வானோர்க்கு உயர்ந்த உலகமும், முடிவான அவா அறுதலின் பயனாக பேரா இயற்கையாகிய எல்லையற்ற இன்ப நிலையும் ஆசிரியரால் அறத்துப் பாலில் கூறப்படுதலின் ஓர் உலக இன்பத்திற்குத் தலைவனாகிய கடவுளை முழுமுதற் பரம்பொருளென ஆசிரியர் கருதினார் என்பது சிறிதும் பொருந்தாது. மேலும் திருவாளர் பண்டிதர் மு. கதிரேசன் செட்டியாரவர்கள் இச்செய்யுட்குக் கூறும் சிறப்புப் பொருள் ஏற்றுக் கொள்வார்க்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். திருமாலினுடைய உலகில் நித்திய சூரியர் அப்பெருமானைப் பார்த்துக் கொண்டிருப்பதாக வைணவர் நூல் கூறுதலால் அங்ஙனம் விழித்திருந்து விண்டு துறக்கத்திற் பெறும் இன்பம் தாம் விரும்பியவரது தோளின்கண் உள தாம் உறக்க இன்பத்தினும் சிறந்ததோ? என்று எதிர்மறைக் குறிப்புமொழியால் அவ்வுறக்க இன்பம் விழிப்பின்பத்தினும் சிறந்ததென்று கூறும் பொருள் நோக்குவார்க்கு ஆசிரியர் திருவள்ளுவர் வைணவ மதத்தினரென்று நிறுவுதற்கு இயலாதென்பது தெளிவு.

ஆதி பகவன் என்பதிலுள்ள பகவன் என்ற சொல் கடவுள் என்ற சொல் போல எல்லாச் சமயத் தெய்வத்திற்கும் பொதுப் பெயராக வழங்கினமை சமணரது நிகண்டினாலே விளங்குகிறது. 'பகவனே யீசன்மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்றபடி

அச் சொல் ஈசன் திருமால் அயன் ஜினன் புத்தன் என்னும் பல கடவுளர்க்கும் பொதுப் பெயராக வழங்கினமை காண்க.

வடமொழிப் போக்கை நோக்குமிடத்து பெரிய முனிவர் களையும் பகவான் என்ற சொல் குறித்து நின்றதென்பது தெளிவு.

ஜைமினி பகவான் வியாசபகவான் என்றவிடத்துக் காண்க. ஆதி என்ற அடை மொழியாலும் புத்தர் அல்லது ஜினர் குறிக் கப்பட்டார் என்று கூறுதல் பொருந்தாது. வைணவர் தமது கடவுளை ஆதிமூலம் என வழங்குவர். சைவர் தமது கடவுளை ஆதி என்று வழங்குதல் 'ஆலவாயில் உறையும் எம் ஆதியே' என்ற திருஞான சம்பந்தர் திருவாக்கால் உணரப்படும். ஆதியென் பது சிவசத்தியின் திருநாமமென்று காமிகாகமம் கூறுகின்றது. ஆகையால் ஆதி பகவன் என்பதற்கு அம்மை யப்பர் என்று சைவர்கள் பொருள் கொள்வார்கள். அந்த மாதி என்மனார் புலவர் என்ற சிவஞான போத சூத்திரப் பகுதியும் உற்றுநோக் குக. இக்கருத்துப் பற்றியே ஆசிரியர் சிவஞான சுவாமிகள்,

" சீர்கொளிறை யொன்றுண் டத்தெய்வநீ என்றெருப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா—வோரில்
அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்று அருளிச் செய்தனர்.

'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்றமையால் ஆதிபகவன் இல்வழி உலகம் தோன்றாது என்பது அறியக்கிடத்தலால் அவன் உலகத்தைப் படைக்கும் முதல்வன் என்பது ஆசிரியர் கருத்தாகும்.

"பரந்து கெடுக உலகியற்றியான்" என்ற திருக்குறளடியிலே கடவுளை உலகத்தைப் படைத்தவன் என்னும் பொருளுள்ள சொற்றொடரால் குறித்தமையின், ஆசிரியர் கடவுளால் உலகம் படைக்கப்பட்ட தன்றென்னும் கொள்கையுடைய சமணசமயத் தைச் சார்ந்தவரல்லர் என்பது தெளிவு.

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது"

என்ற திருக்குறளிலே வினைப்பயனை ஊட்டுபவர் கடவுள் என்பது குறிக்கப்பட்டமையால் அக் கொள்கையிலாராகிய புத்த சமண சமயங்கள் ஆசிரியருடைய சமயம் அல்லவென்பது தெளிவாம்.

"மன்னுயிர்" என்ற சொற்றொடர் திருக்குறளில் பலவிடங்களிலுங் காணப்படுதலால் ஆசிரியர் கணபங்கங் கூறும் புத்த மதத்தினரல்ல ரென்பது தெளிவு

ஆதிபகவனென்ற சொற்றொடர் பொதுப்பெய ராகவாதல் கொள்ளப்படினும் ஆசிரியரது மதம் புத்தமதம் அல்லது சமணம் என்று சொல்ல அஃது இடந்தராது.

அவ்வாறே 'வாலறிவன்' என்ற பிற சொற்றொடர்களின் பொருளும் கருதற்பாலது. "மெய்யறிவினை உடையான்" என்றமையால் பொதுப் பொருளே கொள்ளப்படும்.

"மலர்மிசை ஏகினான்' என்பது தாமரை மலர்மேற் சென்றவன் என்று பொருள் பெறுமிடத்து அன்பர்கள் இதயதாமரைக்கண் விரைந்து செல்பவன் என்றும் இருதயாகாசத்திலே நடனம் செய்பவனாகிய கூத்தப்பெருமானென்றும் பொருள் கூறுவார்க்கும் அஃது இயைந்து நிற்றலால் தாமரைப்பூவின்மேல் நடந்தவராகிய புத்தரையே அது குறிக்கும் என்று சொல்ல இடமில்லை.

"பொறிவாயில் ஐந்தவித்தான்" என்றவிடத்து, அவித்தான் என்ற சொல் இன்மையைச் சுட்டியதேயன்றி காலத்தைச் சுட்டியதன்று. "புலனைந்தும் வென்றானை" என்ற தேவாரமும் காண்க.

"அறவாழி அந்தணன்" என்றவிடத்தும், தருமக்கடலாகிய தண்ணிய கருணையாளன் என்பதே குறிக்கப்பட்டது.

"அருளாரமுதப் பெருங்கடல்" என்ற மாணிக்கவாசகத்தோடு அஃது ஒத்த பொருளுடையது.

"எண்குணத்தான்" என்னும் சொற்றொடர் மதிக்கப்படும் குணமுடையான் என்று பொருள்கொள்ளுமிடத்து பொதுவாகக் கருதப்படினும் எட்டுக்குணம் உடையவன் என்ற பொருளில் சைவர்க்கும் சமணர்க்கும் சிறப்புமொழியாக அமைந்துள்ளது. சமணசமயம் ஆசிரியரது மதம் அன்றென்று முன் விளக்கப் பட்டமையால் இச்சொற்றொடர் சைவர்கொள்ளும் சிறப்புப் பொருளுடையதென்பது யூகிக்கப்படும். இதனாலன்றே ஆசிரியர் பரிமேலழகரும் எண்குணங்கள் சைவாகமத்திற் கூறப்பட்டன வென்று விளக்கிப்போந்தனர். "எண்குணத்தினானை" என்ற தேவாரமும் காண்க. சிவன் என்ற சொல் திருக்குறளிலே வழங் கப்படவில்லை யாயினும் அச்சொற்பொருளை "செம்பொருள்" என்ற சொற்றொடர் இனிது விளக்குதல் காண்க.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்றவிடத்து செம்பொருள் என்பது வீடுபேற்றுக்கு நிமித்த காரணமாகிய செம்பொருளைக் குறித்துநின்றது. பிறவும் அன்ன.

இதுகாறும் கூறியவாற்றால் ஆசிரியர் திருவள்ளுவர் எல் லாச் சமயத்தார்க்கும் பொதுவாகிய சொற்றொடர்களினாலே கடவுளைச் சுட்டியருளினமையால் எம்மதத்தார்க்கும் பொது நூல் திருக்குறள் என்பதும் அச்சொற்றொடர்களை நுணுகி ஆயுமிடத்து அவை சைவ சமயக் கொள்கைகளுக்குப் பொருத் தமாகக் காண்படுதலால் திருக்குறள் சைவசமயப் பொதுத்தன் மையை விளக்கும் பெருநூலாக விளங்குகின்றதென்பதும் தெளியப்படும்.

கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L.

# காழித்தேவாரச் சிறப்பு

(உகூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருப்பதிகங்களின் பெருமை

இங்ஙனம் காலக்கிரமத்தில் திருப்பதிகங்களிற் பாடாந்தரங்கள் ஏற்படினும் அவற்றாற் பொருள் வேறுபடாமையின், அவற்றின் பெருமை திருவுள்ளக் கருத்திற் பிறழாவண்ணம் நிலைபேறுடையனவாதற் பொருட்டுப் பேரரசரும் பெரியாரும் அவற்றைப் பேணிவந்த முறையினை ஒருவாறு கண்டறிந்தோம். இனி, சம்பிரதாயக் கிரமத்தில் அவற்றின் பெருமை எவ்வாறு போற்றப்பட்டு வந்தன என்பதையும் ஈண்டு ஆராய்வோம். அழகிய திருச்சிற்றம்பல முடையான் அருளால் அமைந்த திருக்கூட்டத் திருநெறித் தலைவர்கள் திருப்பதிகங்களைப் பூர்வத்து ஓதுவிக்கும் முறையில் எல்லாம்வல்ல இறைவன் தங்களுக்குக் கட்டளையிட் டருளிய இத் திருப்பணியின் ஏற்றத்தையும் அப் பணியை இன்னவாறு அவ்விறைவன் திருவுள்ளத்துக்கு ஏற்றவண்ணம் கற்பித்தல் வேண்டும் என்று சிந்திக்கும் முறையையும், ஓதுவித்தற்குப் பிராரம்பஞ் செய்யும் கிரமத்தையும், அது தொடங்குமுன் பரமாசாரியனை வழிபடும் வழிபாட்டினையும், சாமானிய பிராரம்பத்தைப் பெறுவதற்கான பிரயத்தனத்தையும் விசேஷ பிரயத்தனத்தையும், சிற்சில சமயங்களில் ஓதுவித்தற்கு ஏற்ற விசேட தொடக்கத்தையும், அதற்குரிய பணியையும், அகச் சமயிகளோடு உரையாடற்கும் புறச்சமயிகளுக்குப் புண்ணியப் பதிகங்களின் பெருமையை உணர்த்துதற்கும் தக்க பரிபாகம் உண்டாக்குதலையும், அவர்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்கும் கிரமத்தையும், பிறப்பானும் ஒழுக்கத்தானும் ஓதுதற்கு உரியாரை ஓதுவிக்கும் இயல்பையும், அவ்வியல்பிற்குத் திருப்பதிகங்களோடு அமைந்த உரிமையையும், அப் பதிகங்களைக் கற்பிக்கும் விதத்தையும், அதற்கேற்ற உபதேசத்தையும், ஓதுவார் உள்ளன்போடு ஓதி உணர்ந்து பூரண பலனை

அடைவதற்குத் தங்கள்மாட்டு இறைவன் பொருத்திய ஆற்றலை யும் அறிவையும் நன்குணர்தல் வேண்டும்.

இவ்வாறு உணரின் திருநெறித் தலைவர்கள் தாங்கள் ஓதுவிக்கும் முறையும் இயலும் பொருளும், ஓதுவிக்கும் பதிகங்களின் தன்மையும், அதனை ஆராய்ந்து சிந்தித்துப் புகட்டும் சொல்லும், சிந்தித்தற் பயனாக ஏற்படுங் கருத்தும், தெளிதலால் விளங்கும் தெளிவும், கூடலால் அமையுங் கூட்டமும் பெற்றவர்களாய், தங்கள்பாற் கேட்பார்க்குத் திருப்பதிகங்களின் பெருமை விளங்குமாறு நுவலும் பாகுபாடும், அந்நுவற்சியை விபாக முறைப்படியும் சம்யோக முறைப்படியும் உரைக்கும் உரையும், சம்யோக முறையின் வகைகளும், அவற்றைப் பூரணப் படுத்துவதற்கான வழிவகைகளும் அவற்றை உபயோகித்தலும், அவற்றிற் கேற்ற முகவுரை பாகசம்பந்தங்களை விளக்கி உரையை முற்றுவித்தலும், அதன் பொருளைப் பிரயோகித்தலும், கேட்பாரது உள்ளத்தில் அவ்வுரை பயன்படுதலும், நல்லுணர்வுள்ள கருத்தினர்க்கு ஏற்றவாறு உரைத்தலும், அவ்வாறு கேட்டார் சித்தத்தில் அவ்வுரை சித்திபெறுவித்தலும் அமைந்தவர்கள் ஆவார்கள்.

ஆகவே ஓதுவிக்கும் நடையும், அந்நடையினை வகுத்துத் தெளிவிக்கும் படிகளும், அவற்றிற்குரிய சாமானிய பிரமாணங்களும், உரை நடைக்கு ஏற்ற வகையும், அதனை மொழிப்படுத்தும் வகையும், அதனை உரைக்கும் உரையும், அவ்வுரை நடைபெறுமாறும், ஒவ்வோரமயம் வரைந்துரைக்க நேரின் அவ்வரை நடைக்கும் உரைநடைக்கும் உள்ள சம்பந்தமும், அதனையுரைக்கும் தொனியும், உரைக்குங்காற் பொருளுக்கேற்ற குறிப்பும் அபிநயமும் உத்தம போதகாசிரியர்களுக்குத் திருவருளால் இயல்பாகத் தானே அமைந்தனவாம். அவ்வாறமைந்த தக்கோரை வழிபாடு செய்தே உள்ளன் புடையார் திருப்பதிகங்களை ஓதியுணர்ந்து ஒழுக்கநெறி நின்று உய்வர். ஓதியுணர்வார்கள் தாமும் பொதுவகையால் எல்லாச் சமயிகளுக்கும் ஆவசியகமான இலக்கணங்களை வழுவாது தழுவிப் பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை

யுடையர்களாய், அச்சிறப்பிலக்கணத்தும் புறத்திலக்கணம் உட லிலக்கணம் அகத்திலக்கணம் என வகுத்து இருபத்து மூன்றாக விரித்த இலக்கணங்கள் அமைந்த சீலர்களாய்த் தெய்வ சுருதி யின் தாற்பரியங்களை ஓதியுணர்வார்கள். இவ்வாறு சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு பெருஞ்சிறப்பினவாகிய திருத்தேவாரங்களைக் கீதாங்கமாகவும் சுத்தாங்கமாகவும் ஓதவும், விசேஷ தீக்ஷை பெற்றுக்கொண்டு சமயநூல்களைக் கற்றறியவும், கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்துவிளங்கிப் பரிபக்குவர்களாய்ச் சற்குருவை யடைந்து நிருவாணதீக்ஷை பெற்றுக்கொண்டு ஞானசாத்திரங் களை உரையுடனே விதிப்படி சிரத்தையோடு கற்றறிந்துகொண்டு இச்சாத்திரங்களின் அநுபவப் பயனாய் ஸ்துதி ரூபமாகிய திருத் தேவாரங்களின் உண்மைப் பொருளைச் சிவனது திருவருள் காட்டக் கண்டு, நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும், நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர்வார மெய்ம்மயிர் பொடிப்பச் சிறிதும் அயராது அப்பெருமானது ஸ்ரீ பாதங்களின் கீழ்த் தூங்கும் உண்மை நிலையைப் பெற்று வாழவும் இக்காழியம்பதியில் வலம் புரி மண்டபம் ஒன்றும்,

நந்துசெந்தமிழ்ப் பன்னிரண்டுசூத்திரமு நவிலுமுப் பொருட்பொதுவியலு
முந்துமற்றியலு முணர்ந்துருக்காட்சி யொள்ளிய சுத்திவாய்ந்தப்பாற்
சிந்துதலில்லா வுருவமுன்மூன்றுந் திகழ்தரப் பெற்றிடையறாது
முந்துமானந்தத் தழுந்திடுஞ்சைவ முனிவர்வாழ் மடங்கள்பலவும்,

அமைதரவடைமா ணாக்கர்பக்குவந்தேர்ந் தாய்தரு சமயநல்விசேடஞ்
சமைநிருவாண மெனுமொருமூன்றுட் டகுதியி னாற்றுவவாற்றிக்
கமைகெழுசரியை முதற்றவநான்கிற் கரிசறப் பயிறிறஞ்செலுத்தி
யுமையொருபாக னுலகமுன்னென்கி னுறுவிப் பார்மடங்கள்பலவும்,

சொற்றவுத்தேச மிலக்கணமமையுஞ் சோதனையாய விம்மூன்றாற்
செற்றபன்னூலு மனுவதித்தெடுத்துத் தெரிதராக் கண்டித்தல்செயவு
முற்றமற்றவற்றானி லுத்துதல்செயவு மொழிவலி யடைந்தவரெல்லாங்
கற்றவர்பல்லோர் குழாங்குழாமாகிக் கலந்துவா ழிடங்கள்பலவும்,

உள (திருஞா. திருவுலாமாலை; திருஞா. புராணம்-௩, ௯, ௰௩; காழிப்புராணம்-நகர் ௩, ௧௫, ௨௰, ௯௮, ௭௮, ௭௯).

(தொடரும்) P. A. முத்துத்தாண்டவராய பிள்ளை

# திருஞானசம்பந்தர் தேவாரம் இயற்கைப்பொரு ளழகு

(உ௲எ-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாறும் ஐம்புலன்களுக்கும் இனிமை பயக்கும் இயற்பொருள்களை ஆய்ந்தனம். இனி, ஆயுமறிவிற்கும் உணர்ச்சிக்கும் வியப்பு, பெருமிதம் முதலிய எண்வகைச் சுவைகளையும் விளைத்து இன்பந் தரவல்ல திருப்பாடற்பகுதிகள் கருதுதற் குரியன. திங்களைச் சென்று தாக்குவது போன்ற பொழிலகத்தே வளர்கின்ற கிளிகள் கேட்டதைக் கேட்டவாறு கிளக்கும் ஆற்றலுடைமையால் மக்கள் பயில்கின்ற அறுபத்திநான்கு நுண்கலைகளையும் தாமும் பயிற்சிசெய்கின்ற இயல்பினைக் கூறும் பகுதி அறிவிற்கு வியப்புமிக்க நயந் தருவதாகும். அது,

"வட்டமதி தட்டுபொழி லுட்டமது வாய்மைவழு வாதமொழியாற்
சட்டகலை யெட்டுமரு வெட்டும்வளர் தத்தைபயில் சண்பைநகரே"

அவ்வாறே வண்டுகள் பண்ணின் நயமுற நேரிசை பாடுவதும் வியத்தற் குரியது.

"பண்டான் கொண்டு வண்டுபாடும்"

"நேரிசை பாணில் யாழ்முரலும்".

யானையும், குரங்கும், மக்கள் போல் அறிவுடையவர்கச் சில பாடல்களிற் கூறும் உயர்வு நவிற்சியும் பாராட்டத் தக்கது. பெருமிதச் சுவையானது அச்சத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டதன்று. அச்சமாத்திரம் இருக்குமாயின் அழகும் இனிமையும் தோன்று. பேராற்றலும் பேரழகுமுடைய உயர் பொருள்கள் காட்சியளவில் உள்ளம்நிரம்பிய அச்சவுணர்வினைத் தந்து பின்னர் தமது உளங்கவர் நயத்தினால் உயிரறிவினைத் தன் பாலீர்த்து இணக்கஞ் செய்யுந் தன்மையன. பல்வகை யுயிர்த்திரளும் பல்கிப் பெருகி வளர்த்துத் திரிவதற் கிடமாய் நிலத்தையும் வானையும், தமது பெருந் தோற்றத்தால் ஒன்று சேர்த்துக்

காட்டுவதாய்க் கடலினு மிக்க முழக்கமு மதிர்ச்சியு முடையதாய் அரிய பெரிய யானை முதலியவற்றையும் அச்சுறுத்திப் பாய்ந்து செல்லும் மலைவீ ழருவியின் தோற்றம் அளவில் பெருமிதங்காட்டும் இயல்புடையது. பெருமிதச் சுவைக்கு அஃதே சிறந்த எடுத்துக் காட்டு. அது,

"மண்ணினைமூடி வான்முகடேறி மணிதிரைகடன் முகந்தெடுப்ப
விண்ணளவோங்கி வந்திழியருவி"

என்ற விடத்துக் காண்க.

வான் வரை வளர்ந்தோங்கிய மாவும், வாழையும், பலாவும், மகிழும், மாதவியும் உடைய பெருஞ் சோலையகத்தே செழித்துப் பொங்கித் ததும்பும் இனிய தேனினைக் கவலையில்லாமல் உண்டு களித்து அங்ஙனம் உண்ட மயக்கத்தால் பாடிக்கொண்டு களிபெருஞ் செல்வர் கள்ளாட்டயர்ந்தாலன்ன பொலிவினையுடைய வண்டுகள் நிலவிவாழு மியல்பினைக் கூறும் பகுதி பொழிலின் பெருமித வளத்தை ஒருபாலுணர்த்தி, செல்வரையும் விண்ணவரையும் போல வண்டுகளும் இறுமாந்து வாழ்கின்றன என்னுங் குறிப்பால் நகைச்சுவைச் சார்பாய இன்ப வுணர்ச்சியையும் நல்குகின்றது.

"வம்பார் குன்றந் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ் செய்குற்றாலம்"

"வானளவு சூதமிள வாழைமகிழ் மாதவி பலாநிலவிவார்
தேனமது வுண்டுவரி வண்டுமருள் பாடிவரு தேவூரதே"

அவ்வாறே மேகங்கள் உயர்ச்சி மிக்க நெடியமரப் பொழில்களில் வந்து படியவும் ஏணிபோன் றுயர்ந்த கரும்பின் கணுக்களைப் பிடித்தேறி மந்திக் கூட்டங்கள் முகில் மேடையைச் சேருந்தோற்றம் அவற்றின் பெருமித வாழ்க்கையையும் வலிமையையும் கவலையற்ற உள்ளப் பெரும் போக்கினையும் எடுத்துக் காட்டி அகமகிழ்வளிக்கின்றது.

"கொண்டலார் வந்திடக் கோலவார் பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா முகிலினைக் கதுவுகொச்சை"

வேள்விப் புகை போய் வானளாவிய சோலையின்மீது முகில்போலப் படிவதால் அதனை முகிலென எண்ணி மயில்கள் மகிழ்ந்தாடுந் தோற்றம், பெருமிதத்தையும் நகைச்சுவையையும், பேரழகையும் ஒருங்கு நல்கும் இயல்பிற்று.

"மானபுகழ் வேதியர்க ளாகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே"

மலையின் உயரத்தைப் பற்றிக் கூறுமிடங்களில் பெருமிதச்சுவை மிக்குக் காணப்படும். மேக மண்டிலத்தைக் கடந்து அப்பாற் சென்று வளைந்த மதியின் பிறையைத் தாக்கிச்செல்லும் தோற்றமும் உயர்வும் உடைமை காரணமாக குளிர் மிகுந்து பனிமூடப் பெற்று நிலவொளியாற் றிகழும் மலையென்பார்.

"வானிற் பொலிவெய்தும் மழைமேகங் கிழித்தோடிக்
கூனற் பிறைசேருங் குளிர்சாரற் கொடுங் குன்றம்"  என்றார்.

இடியின் முழக்கத்தால் கூகைக் கூட்டங்கள் ஓட்டெடுப்ப யானையும் அடலேறும் அதிர்ந்தோடும் உயர்சிகரத்தே ஊற்றெடுத்து மணியும் பொன்னும் முகில் சிதறிய முத்தும் வாரிக்கொண்டு யானை மருப்பு, சந்தனம் அகில், கோங்கு, குரவம், புன்னை, வேங்கை முதலியவற்றின் பூக்களும் விரவப் பெற்று மலையினின் றிழிந்து நானிலத்துள்ள முல்லை, பாதிரி, குரவம், புன்னை முதலியவற்றின் மலர்களும் வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி முதலிய பழங்களும் மோதி எறிந்துகொண்டு மலைத்தேனும், மயிற்றோகையும், முகில் நீரும், முத்தும், கடலுடைப் பண்டமும் கலந்து பெருக்கெடுத்தோடுதலினாலே மேகமண்டிலத்தையும், கடலையும், நானிலத்தையும் ஒன்று சேர்க்கும் தோற்றமுடைய பேரியாற்றின் கழிபெரும் போக்கினை காவிரியில் வைத்து நமதாசிரியர் விளக்கியருளினது யாவருள்ளத்தையும் பெருமித வுணர்வான் நிறைக்கவல்லது. அது திருமாந்துறை, திருவடகுரங்காடுதுறை என்னுந் தலங்கட்குரிய தேவாரப் பதிகங்களிலினிது காணப்படும்.

*உதாரணம்:*

"செம்பொனுர்தரு வேங்கையு ஞாழலுஞ் செருந்திசெண்பகமா
கொம்புமாரமு மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துந்தி [னைக்
அம்பொனேர் வரு காவிரி"

"விளவு தேனொடு சாதியின் பலங்களும் வேய்மணி நிரந்துந்தி
அளவி நீர் வருங் காவிரி"

"கோடுதேன் சொரிகுன்றிடைப் பூகமுங் கூந்தலின் குலைவாரி
ஓடு நீர் வருகாவிரி"

"இலவ ஞாழலு மீஞ்சொடு சுரபுன்னை யினமரு திலவங்கம்
கலவி நீர் வரு காவிரி"

"கோங்கு சண்பகங் குருந்தொடு பாதிரி குரவிடை மலருந்தி
ஓங்கி நீர் வருகாவிரி"

"பெருகு சந்தனங் காரகில் பீலியும் பெருமர நிமிர்த்துந்திப்
பொருது காவிரி"

"நறவமல்லிகை முல்லையு மௌவலு நாண் மலரவைவாரி
இறவில் வந்தெறிகாவிரி"

"மந்தமார் பொழின் மாங்கனி மாந்திட மந்திகண் மாணிக்கம்
உந்திநீர் வருகாவிரி"

"மேகத்திடி குரல் வந்தெழ வெருவிவ் வரையிழியுங்
கூகைக் குலமோடித் திரிசாரற்"

'பருமா மதகிரி யோடரியிழியும் விரிசாரற்
குருமாமணி பொன்னேடிழி யருவிக்"

"கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபாதிரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி"

"மந்தமா யிழிதரக் களிற்றின மருப்பொடு பொருப்பினல்ல
சந்தமா ரகிலொடு சாதியின் பலங்களுந் தகையமோதி
உந்துமா காவிரி"

"முத்துமாமணியொடு முழைவள ராரமு முகந்துநுந்தி
யெத்துமா காவிரி"

"கறியு மாமிளை கொடி கதலியின் பலங்களுங் கலந்துநுந்தி
யெறியுமா காவிரி"

"கோடிடைச் சொரிந்த தேனதனொடுங் கொண்டல்வாய் விண்ட முன்னீர்
காடிடைப்பீலி யுங்கடலுடைப் பண்டமுங் கலந்துநுந்தி
ஓடிடைக் காவிரி"

பொழிலினைப் பற்றி வளமிகுந்த வருணனை பலவிடங்களிற் காணப்படுகின்றது. ஐந்திணைகளிலுமுள்ள பொழில் வளம் இத் திருநெறித் தலைவர் தேவாரத்திற் காணப்படுகின்ற வளவு தமிழிலக்கியத்திலே வேறொன்றிலுங் காண்பதரிது. ஆறும் மலையும் எவ்வாறு பெருமிதத்திற்குத் தலைமையான எடுத்துக் காட்டாக இத்திருப்பாட்டுக்களுள் இலங்குகின்றனவோ அவ்வாறே கண்கவர் வனப்பிற்கும் உளங்கவர் இன்பச் சுவைக்கும் உறுநிலையமாகப் பொழில் நலம் விளங்குகின்றது. அவை பின் விரிப்பாம்.

எத்தன்மைத்தாய விண்ணவரும் உறைகின்ற இடம் பொழிலேயாம் என்பார்.

"பாலுந்துறு திறளாயின பரமன் பிரமன்றன்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்"—என்றார்.

சிற்றுயிர்களது விளையாட்டு மகிழ்ச்சியினை சில இடங்களில் மிகநயம்பெறக் காணுதல்கூடும். மூங்கில்கள் வளர்ந்து நிற்பதனால் அவற்றில் சிறு குரங்குகளேறி நடனஞ் செய்கின்ற காட்சியும், சந்தனமரத் தளிர்களை மலைச் சோலைகளில் உலாவிப் பிடுங்கித் தின்று பெண்யானைகள் தமது கன்றினோடு விளையாடுவதும், சிங்கம், யானை, பன்றி முதலிய விலங்குகள் மலையுச்சியிலுள்ள குகையில்களில் தமது பெண்களோடு கூடி விளையாடுவதும் பின் வருஞ் செய்யுட்களில் கூறப்படுவது காண்க.

"திருகல் வேய்கள் சிறிதே வளையச் சிறுமந்தி
முருகின் பணைமே லிருந்து நடஞ்செய் முதுகுன்றே"

"குன்றின்மலி துன்றுபொழி னின்றுகுளிர் சந்தின்முறி தின்று குலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடுகொ ளத்திமலையே"

"மலைத்தலை வகுத்தமுழை தோறுமுழை வாளரிகள் கேழல்களிறு
குலைத்தலை மடப்பிடிகள் கூடிவிளை யாடிநிகழ் கோகரணமே"

பேராற்றலாற் செருக்கித் திரியும் மத யானையானது தன்னினும் வலிய யாளி வரவினை யஞ்சித் தன்னுடைய கொம்பினாலே பாறையைக் குத்தி அப்பொழுது தோன்றும் பெரும்புடையினில் ஒளித்துவைகும் செயலானது யானையின் பெருந்திறலையும் எத்துணை வலிமையுடையார்க்கும் அவர் அஞ்சத்தக்க பெரியர் உண்டென்னும் உண்மையு முணர்த்தி அச்சத்தையும் வியப்பையும் ஒருங்குணர்த்தும் பான்மையது.

"மத்தக் களிறுளிவ வரவஞ்சி மலைதன்னைக்
குத்திப் பெருமுழை தன்னிடை வைகுங் கொடுக்குன்றம்"

வலியார் முன் எளியார் அச்சுற்று விலகுங்கால் அது காண்பார்க்கு இரக்கமுண்டாகுந் தன்மையதென்பதை பின் வருபவற்றுட் காண்க.

"கானமான் வெருவுறக் கடுவிரலூகம்    கடுவனொடுகளு
மூர் கற்கடுஞ் சாரல்"

"கருமைகொள் வடிவொடு சுனைவளர் குவளைக் கயிலினம் வயலிள
வாளைகளிரிய
எருமைகள் படிதர விளவன மாலும்"

இவ்வடிகளில் மான் அஞ்சும்படியாக கொடுந் தொழில் புரியும் நகத்தையுடைய புலியும் குரங்கும் மலைச்சாரலிலே உலாவுதலும் அச்சுறுத்துதற்குரிய கருநிறமும் பெருவடிவமுமுடைய எருமைகள் சுனைகளிலே படியுங்கால் கயல்மீன்களும், வாளைமீன்களும் ஓடிவிட குவளைப்பூவின் பாங்கருள்ள இள அன்னமானது விரைந்து இயங்க வியலாது மயங்குதலும் கூறப்பட்டன.

உயரில்லனவும் உயிருள்ளனவாகத் தோன்றுவதைக் குறித்து நகைச் சுவையைப் பின்னவற்றின் வைத்துக் காட்டிய சிறப்பு திருவெண்காட்டின் கடற்கரைக் குளிர் சோலையில் மடல் விரிந்த முடத்தாழையின் நிழலை அன்னமென்று அஞ்சி

பொய்கையின் கண்ணுள்ள கெண்டை மீனானது தாமரைப்பூவி னடியில் ஒளித்துக் கொள்வதைப் பார்த்து கடலினால் ஒதுக்கப் பெற்ற ஒளி பொருந்திய முத்துக்கள் சிரிப்பதுபோலுங் காட்சி வருந் தேவாரத்துட் காண்க. மருத நெய்தல் திணை மயக்கமும் ஆண்டு ஒத்துணர்க.

"விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் றண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே"

ஒன்றைப் பிறிதொன்றாகக் கருதி மயங்குவது காரணமாக எழு கின்ற நகைச் சுவையானது வருஞ் செய்யுளிற் காண்க.

"வலம்வந்த மடவார்கண்டமாட முழவதிரமழை யென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே"

(தொடரும்)

கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.

---

# இலக்கண விளக்க உரையாளர்

'செந்தமிழ்ச்செல்வி' உ-ஆம் சிலம்பு, ங, ச-ஆம் பரல் களில் 'இலக்கணவிளக்க உரையாளர் யார்?' என்னும் தலைப் பின் கீழ் யாம் எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக 'இலக்கண விளக்க உரையாளர் நூலாசிரியரே' என்னும் தலைப்பின் கீழ் திருவாளர், வி. சிதம்பரராமலிங்க பிள்ளையவர்களால் ரு, கூ-ஆம் பரல்களில் ஓர் கட்டுரை வரையப்பெற்றுளது. எமது கட் டுரை யிறுதியில் "யாம் எழுதிய இது திரிபுடைத்தாமாயின் பிறர் அதனை யெடுத்து விளக்குழி அதனாற் பெருமகிழ்வே யெய்தாநிற்பே மென்க" எனக் கூறியது எமது மெய்யான உள் ளக்கிடக்கை. பிள்ளையவர்கள் கட்டுரை நேரிய முறையில் உண்மை விளங்க எழுதப்பட்டிருப்பின் அன்னார்க்கு எமது

பணிவையும் மகிழ்வையும் புலப்படுத்தி யமைவதாகிய அத் துணையே எமது செயலாக விருத்தல் கூடும். அங்ஙனம் எழுதப் பட்டிராமையின் யாமும் இஃதெழுதுவது கடப்பாடாகிவிட் டது.

பிள்ளையவர்கள் எமது கட்டுரையில் ஒரு தொடரை யெடுத் துக்காட்டி 'என்று கூறினமைக்கு நாம்பெரிது மிரங்குகின்றே மாயினும்' என்றும், பிறிதொரு தொடரை யெடுத்துக்காட்டி 'என்று கூறினமைக்கு நாம் கழிபேருவகை பூக்கின்றேம்' என் றும் கூறித் தமது மறுப்புரையை முடித்துள்ளார்கள். உண்மை யில் அவர்கள் உளப்பாங்கு இவையெனத் தெரியின் அவர்கள தருளுக்கும் அன்புக்கும் உரியமாயினமை குறித்துப் பெருமகிழ் வெய்தா நிற்பேம். மற்று, அவர்கள் 'என்பது முதலாகப் பல படப் பாரித்துக் கூறியனவெல்லாம் வெறும்போலியாயின' என் றிங்ஙனம் வரைந்துள்ளவற்றையும், எடுத்துக்கொண்ட பொரு ளுக் கியைபின்றியே கூறியிருப்பன பிறவற்றையும் ஈண்டாராய் தல் எம் கருத்தன்று. இயைபுடைய சிலவே இங்கு ஆராயப் படுவன.

பிள்ளையவர்கள் யாம் எழுதியிருப்பனவற்றால் சுவாமிநாத தேசிகரின் பெருமைக்கும், சிவஞான சுவாமிகளின் பெருமைக் கும் யாதோ இழுக்கு நேர்வதாகக் கருதிக்கொண்டு முதற்கண் அதனைப் பரிகரிப்பான் றொடங்குகின்றன ரெனத் தோன்று கிறது. அதன்பொருட்டு அவர்கள் கூறுவன:

" சுவாமிநாத தேசிகர் யாதொன்றும் பயனின்றி வாளா கூறுரென்பதும், அவர் நூலாசிரியராகிய தாம் உரையியற்றுதல் தக்கதோவென வினா எழுப்பி அதற்கு விடை கூறும்வழி 'என் கண்காண............வயித்திய நாத, னிலக்கண விளக்கம் வகுத் துரை யெழுதினன்' என மேற்கோள் காட்டுகின்றுரென்பது நாம் அறிந்த நிலைமையில் அவர் கூறுவதைப் பொருளில் கூற் ருகப் புறக்கணித் தொதுக்குதல் கூடாது."

" இனி மாதவச் சிவஞான சுவாமிகளோ இலக்கணவிளக் கத்திற்கு 'இலக்கண விளக்கச் சூறுவளி' யென்னும் பெயரால்

மறுப்பொன்று அருளிய பெரியார். ஒரு நூலுக்கு மறுப்பு எழுதுவார் அந்நூலை எவ்வளவு நுணுகி நோக்கியிருப்பாரென்பதும் 'உயிரும் மெய்யுங் கூடுகின்ற கூட்டத்தினை எல்லா மெய்யுமென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும்' என ஐயுறவு தோன்றக் கூறுகின்றாரென்பதும் மறுப்பெழுதிய மாதவச் சிவஞான சுவாமிகள் பார்வைக்குப் புலப்படாமலிருந்தனவென்று எண்ணிக்கொள்வது அறிவுடைமைக் கழகன்று" என்பன.

இவற்றிலுள்ள சொன்முடிபு வழுக்களையெடுத்துக் காட்டுதலிற் போதரும் பயனின்மையின் அவற்றை விடுத்துப் பிள்ளையவர்களின் கோட்பாடுகளையே ஈண்டாராய்தல் தக்கது. சுவாமிநாததேசிகர் கூறியதை யாம் புறக்கணித் தொதுக்கினாற் போன்று கூறப்பட்டுளது. யாம் எமது கட்டுரைத் தொடக்கத்திலேயே சுவாமிநாத தேசிகர் கூற்றுக்களை யெடுத்தாராயப் புக்கதனையும், பின்பு, 'ஒரு காலத்தினராய் நூலாசிரியரை அறிந்துள்ள ஈசான தேசிகரும் சதாசிவ நாவலரும் கூறியவற்றை எங்ஙனம் புறக்கணித்தல் கூடும்' என்றெடுத்துக்கொண்டிருப்பதனையும் உணர வல்லார்க்கு யாம் அதனைப் புறக்கணித்திடவில்லையென்பது தெள்ளிதின் விளங்கா நிற்கும். 'சுவாமிநாத தேசிகர் யாதொன்றும் பயனின்றி வாளா கூறுரென்பது நாம் அறிந்த நிலைமையில் அவர் கூறுவதைப் பொருளில் கூற்றாகப் புறக்கணித் தொதுக்குதல் கூடாது' என்றும், 'ஒரு நூலுக்கு மறுப்பு எழுதுவார் அந்நூலை எவ்வளவு நுணுகி நோக்கியிருப்பார்' என்றும் கூறும் கூற்றுக்கள் அறிஞரவைக் களம் ஏறுதற்குரியவாமோ? தேசிகர் யாதொன்றும் பயனின்றி வாளா கூறுரென்பதனை அறிந்தவர் யாவர்? அவரறிந்தது கனவிலா? நனவிலா? தேசிகர் யாதொன்றும் பயனின்றிக் கூறுரென்பது கனவிலாதல் நனவிலாதல் எம்மாலறியப்படாமையின் யாம் அவர் கூற்றைப் புறக்கணித் தொதுக்கினும் அஃதும் அமையுமன்றே? 'ஒரு நூலுக்கு மறுப்பெழுதுவார் அந்நூலை எவ்வளவு நுணுகி நோக்கியிருப்பர்' என்றுகொண்டு அவ்வளவில் அமைவதாயின் உலகின்கண் ஆராய்ச்சியென்பது தோன்று

தற்கு இடமேயில்லை. சிவஞான முனிவர்தாமும் தொல்லை நூல் உரையாசிரியர்களையெல்லாம் மறுத்தெழுதியிருத்தலும் அமையாது. அத்துணையோ? சிவஞான முனிவர் முதலாயினோர் இயற்றிய நூல் உரைகளையெல்லாம் பிறர் எங்ஙனம் மறுத்தெழுதிய விடத்தும் பிள்ளையவர்கள் போல்வார் வாய்திறவாது அடங்கியிருக்கக் கடமைப்பட்டவராவர். இவ்வாற்றால் பிள்ளையவர்கள் வழக்கு வறிதே அழிந்தொழிந்தமை காண்க. இனி, இலக்கண விளக்க நூலாசிரியரே அதற்குரைகண்டாருமாகார் என்பதற்கு யாம் எடுத்துக்காட்டிய காரணம் மூன்று. அவை:

க. இலக்கண விளக்கப் பதிப்புரையில் 'நூற்கு உரையும் பாயிரமும் அணியியலிற் சொல்லணிச்சூத்திரங்களும் வைத்திய நாததேசிகருடைய புதல்வர் ஐவருள் மூத்தவராகிய சதாசிவ தேசிகரால் இயற்றப்பட்டன எனக் கூறுவாருமுளர்' என்று குறித்திருத்தலாற் பெறப்படும் பரம்பரை வழக்கு.

உ. தாமே நூலும் உரையும் இயற்றிப் போந்த பிரயோக விவேகமுடையாரும், இலக்கணக்கொத்து நூலாரும் 'சூத்திரஞ்செய்தாம்' கடலென்றும்' என்றிங்ஙனம் தாமே நூலும் உரையும் இயற்றியோரென்பது தோன்றத் தன்மையாற் கூறிச் செல்லுதல் போலாது, இலக்கண விளக்க உரையாளர் 'எழுத்திலக்கணம் உணர்த்துகின்றார்' 'இந்நயம் பற்றி இவர் இலக்கணங் கூறுமையின்' 'சார்பின் பாலவென்றார் இந்நூலுடையாரென்றுணர்க' என்றிங்ஙனம் பலவிடத்தும் நூல் செய்தவரைப் படர்க்கையில் வைத்துக் கூறி, நூல் செய்தவரும் வேறு தாமும் வேறு என்பதனைப் புலப்படுத்துவது.

ந. இலக்கண விளக்க உரையாளர் 'உயிரும் மெய்யுங் கூடுகின்ற கூட்டத்தினை எல்லாமெய்யுமென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப்போலும்' என நூலாசிரியரது கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறுவது; என்பன.

இவற்றுள் முதலாவதை எடுத்து மறுக்குமிடத்து, இலக்கணவிளக்கவுரை யியற்றினோர் சதாசிவ நாவலரென்று வாய்

மொழியளவிற் கூறுவாரை ஆதரிக்க வந்தேமெனக் கூறப்பட்டுளது. 'சுவாமிநாத தேசிகர் சரித்திரம் அவர் வைத்தியநாத நாவலரிடம் தாமியற்றிய இலக்கணக்கொத்து நூலைச் சொல்ல அவ் வைத்தியநாத நாவலர் மிக வியப்புற்று மனமகிழ்ந்தாரென்று கூறுகின்றது' என்றும், 'வைத்தியநாத நாவலர்...... தம்மிடம் எதிர்பார்த்த தொழிலைச் செய்து முடித்தனர்; இதுவே பரம்பரை வரலாறு' என்றும் யாதோ ராதரவும் காட்டுத லின்றிப் பரம்பரையெனக் கூறிச் செல்லும் பிள்ளையவர்கள் வாய் மொழியளவிற் கூறுவாரை யாம் ஆதரிக்க வந்தேமென மறுக்கப்புகுவது என் கருதியோ? அன்றியும் அவர்கள் "சிவஞான சுவாமிகள் நேரிலறிந்தாரிடமிருந்து வழிவழி வந்த செய்தியை மேற்கொண்டும், நூலுரைகளிற் காணப்படுங் கருத்துக்களை நுணுகி யாராய்ந்தும் அவ்வாறு கூறினார்கள்" என்பதனால், சுவாமிகளே வழிவழி வந்த செய்தியையும் பிரமாணமாகக் கொண்டுளார்களென ஒத்துக்கொள்ளவில்லையா? 'சிவஞான சுவாமிகள் நூலுரைகளை நுணுகி ஆராய்ந்து கூறினார்கள்' என் பதிலிருந்து ஏனையவற்றினும் அது வலியுடைத்தென்பது பிள்ளையவர்கட்கும் கருத்தாகச் செய்தே, அவர்கள் தாமும் நூலுரைகளை யாராய்தலையே முதன்மையாகக் கொள்ளுவ தன்றோ அவர்களதறிவுடைமைக் கழகாகும்? அவ்வாறின்றிப், பிறர் ஆராயுங்கால் அங்ஙனம் ஆராய்வதனையே ஒரு குற்றமாக எடுத்துக்கொள்வது அவர்களதறிவுக்கும் அருளுக்கும் சிறிதும் ஏற்றதாகாது. இனி, இரண்டு மூன்றும் காரணங்கட்கு மறுப்பாகப் பிள்ளையவர்கள் கூறுவன :—

"வைத்தியநாத நாவலர் இலக்கண விளக்க நூலைத் தம்முடைய தனி வாக்கினாற் கூறினாரல்லர். அவர் பெரும்பாலும் பவணந்திமுனிவர் தொல்காப்பியர் முதலியோர் கூறிய சூத்திரங்களைத் தழுவிச் சூத்திரமும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் முதலியோர் கூறிய வுரைகளைத் தழுவி உரையும்......செய்து முடித்தனர்."

"பிறவுரையாசிரிய ருரைப்பகுதியை அவ்வாறே எடுத்தமைக்கப் புகுவார் ஒருவர் தம்மைப் படர்க்கையிற் கூறுதல்

பொருந்துமே யன்றித் தன்மையிற்கூறிச் செல்லுதல் பொருந்தா தென்பது யாவரும் எளிதின் அறிவதொன்று.''

" அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப்போலும்' என உரையெழுதினுர் நூலாசிரியரது கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறும் பகுதி இளம்பூரணர் கூறிய வுரைப் பகுதியேயாம்.''

" வைத்தியநாத நாவலர் இலக்கண விளக்கச் சூத்திரமியற் றும்பொழுது தம்மைத் தொல்காப்பியரையும் பவணந்தியாரை யும் சேர்த்து உருக்கிவார்த்த பிண்டமாகவும், உரையியற்றும் பொழுது தம்மை இளம்பூரணர் சேனுவரையர் நச்சினுர்க்கினி யர் மயிலைநாதரென்னு மிவ் வனைவரையுஞ் சேர்த்து உருக்கி வார்த்த பிண்டமாகவும் பாவித்துக்கொண்டாரென்பதே பெறப் படுவதாம்'' என்பன.

இங்கு வழக்கிற்குரிய ஓர் உரைப்பகுதியை இளம்பூரணத்தி னின் றெடுத்ததெனக் காட்டிய பிள்ளையவர்கள் அங்ஙனமே அவ்வுரையாளர் நூலாசிரியரைப் படர்க்கையில் வைத்துக் கூறி யிருக்கும் பகுதிகள் பலவற்றையும் இன்னுழி இன்னுழி யிருந் தெடுக்கப்பட்டன வெனக் காட்டுதற்குக் கடமைப்பட்டவராவர். அவை யாவும் அவர்களாற் காட்டப்பட்டன வென்றே வைத்துக் கொண்டு மேல் ஆராய்ச்சி நிகழ்த்துதும்.

இலக்கண விளக்கச் சூத்திரங்கள் மிகுதியும் தொல்காப்பி யச் சூத்திரங்கள் முதலியவற்றைத் தழுவியும், அங்ஙனமே இலக்கண விளக்கவுரை இளம்பூரணர் முதலானோர் உரைகளைத் தழுவியும் ஆக்கப்பட்டுள்ளன என்பதைத் தமிழிலக்கணம் கற் ருேர் யாவரும் அறிவர். இங்ஙனம் நூலியற்றுவாரும், உரை யியற்றுவாரும் தமக்கு முன்னுள்ள நூல் உரையாசிரியர்களின் கூற்றுக்களை மிகுதியாகவோ, குறைவாகவோ, திரித்தோ, திரியாமலோ தமது நூல் உரைகளில் எடுத்தமைத்துக் கொள் வது வழக்காறே. நன்னூலார் பல சூத்திரங்களை முன்னூல்களி லிருந்து சிறிதும் வேறுபடுத்தாமலே எடுத்துவைத்துக்கொண் டிருத்தலும் காண்க. அவர் இப்பொழுது இறந்துபட்ட பழைய

நூல்களிலிருந்து மற்றும் எத்தனையோ பல சூத்திரங்களையெடுத்துக்கொண்டுளாரெனின் அதனை யாவர் எங்ஙனம் மறுத்துரைக்கற்பாலர்? உரையாளர்களும் தமக்கு முன்புள்ள உரையில் வேண்டுமவற்றை யெடுத்துக் கோடல் வழக்கே யென்பதற்குப் பல சான்றுகள் காட்டலாகும். தொல்காப்பியச் செய்யுளியலுக்குப் பேராசிரியரியற்றிய உரையையும் நச்சினார்க்கினியார் எழுதிய உரையையும் ஒத்து நோக்குவார்க்கு நச்சினார்க்கினியர் பெரும்பாலும் பேராசிரிய ருரையை யெடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது புலனாம். முன்னூல் உரைகளிருப்பவும் கற்பார்க்கு உபகாரப்பட அவற்றை வேறு படுத்து நூலுரைகள் வகுக்கப்புகுவார் தம் கருத்துடன் மாறுபடாதவைகளை முன்னையவற்றினின்றும் எடுத்துக்கொள்வது தமக்கு வீணிலே காலக்கேடுண்டாகாமற் பாதுகாப்பதோர் நெறியாம். அன்றியும் அது முன்னையவற்றில் அவர்க்குள்ள மதிப்புடைமைக்கு அறிகுறியுமாகும்.

இங்ஙனம் ஒருவர் முன்னூ லுரைப் பகுதிகளை யெடுத்தமைத்துக்கொள்ளினும் அவர் அவைகளை யுடம்பட்ட வகையில் அவற்றை அவருடைய கருத்துக்களென்னத் தடையில்லை. அந்நூலுரைப்பகுதிகளா லெய்தும் புகழிலும் இகழிலும் அவருக்குரிமையுண்டு. இன்ன நூல் உரைகளினின்றும் அவை யெடுக்கப்பட்டன என்பதும் காணப்படாதநிலையில் முழுப்புகழும் இகழும் அவரையே சார்வனவாகும். இவ்வாற்றால் இலக்கணவிளக்க நூலாரும், அதன் உரையாளரும் முன்னூல் உரைகளிலிருந்து வேண்டும் பகுதிகளை யெடுத்தமைத்துக்கொண்டனராயினும் அவை அவர்களின் கருத்துக்களென்றே கோடல்வேண்டும். அல்லாக்கால் அம்முன்னூல் உரைப்பகுதிகள் வேறெந்நூல் உரைகளினின்றெடுக்கப்பட்டனவென்றும், அவைதாமும் மற்றெந்நூல் உரைகளினின் றெடுக்கப்பட்டனவென்றும் இங்ஙனம் மேன்மேல் வரம்பின்றி ஆராய்தற் கிடனுண்டாகி விடுதலின் இன்னவை இன்னாராலியற்றப்பட்டனவென்பது பெறப்படாதொழியும். இக்கருத்தானன்றே சிவஞானமுனிவர் இலக்கணவிளக்கச்

சூத்திரங்களும், அதனுரையும் பெரும்பாலும் முன்னூல் உரைகளினின் றெடுக்கப்பட்டனவாகவும் அவற்றை இலக்கணவிளக்க ஆசிரியர்க்கே உரியவாகக்கொண்டு தமது சூறாவளியின்கண் மறுத்திட்டதூஉமென்க. பின் வரும் எடுத்துக்காட்டுகளால் இது நன்கு விளங்குவதாகும்.

க. தொல்காப்பிய முதற் சூத்திரவுரைக்கண், நச்சினார்க்கினியர் "இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின் எழுத்திலக்கணம் உணர்த்தினமை காரணத்தான் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுத்தையுணர்த்திய அதிகாரமென விரிக்க. அதிகாரம்-முறைமை" என்றனர்.

நன்னூல் முதற் சூத்திரவுரைக்கண், மயிலைநாதர் "இவ்வதிகாரம் என்னபெயர்த்தோ வெனின் எழுத்திலக்கணமுணர்த்தினமையின் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. அதிகாரமென்றது முறைமை" என்றனர்.

இலக்கணவிளக்க முதற் சூத்திரவுரையில் அதனுரையாளர் "இவ்வதிகாரம் எழுத்துணர்த்துணர்த்தினமையான் எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுத்தை யுணர்த்திய அதிகாரமெனவிரிக்க. எழுத்தென்றது அதன் இலக்கணத்தை; அதிகாரமென்றது முறைமை" என்றனர்.

இலக்கண விளக்கச் சூறாவளியில், சிவஞானமுனிவர் "எழுத்ததிகாரமென்புழி அதிகாரம் முறைமையென்றார். அதிகாரமென்னும் வடசொற்கு அது பொருளன்மை தொல்காப்பிய விருத்தியிற் கூறியவாற்றா னறிக" என்று மறுத்துரைத்தனர்.

உ. 'புள்ளியில்லா வெல்லாமெய்யும்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் 'உயிர்த்தல்' என்பதற்கு 'ஒலித்தல்' என்று பொருள் கூறினர் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும்.

இலக்கணவிளக்கத்தில் அப்பொருளே உணர்த்த எழுந்த 'புள்ளியில்லா' என்னுஞ் சூத்திரவுரையில் 'உயிர்த்தல்' என்பதற்கு 'ஒலித்தல்' என்று பொருள் கூறப்பெற்றுளது.

இலக்கணவிளக்கச் சூறாவளியில் "உயிர்த்தலென்பதற்கு ஒலித்தலெனப் பொருளுரைத்தார். முன்னுருவாகியும் உருவு திரிந்து முயிர்த்தல் வரிவடிவிற்கல்ல தொலிவடிவிற் கன்மையின் ஒலித்தலென்னும் பொருளேலாமை யறிக" என்று சிவஞான முனிவர் மறுத்தனர்.

௩. 'எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே'

என்பது நன்னூல்.

'எண்பெயர் முறைபிறப் புருவளவு முதலீ
றிடைநிலை போலியொடு பதம்புணர் புளப்பட
வாறிரு பகுதித் ததுவென மொழிப'

என்பது இலக்கணவிளக்கம்.

இலக்கணவிளக்கச் சூறாவளியில் 'எண்ணுதற்கும் பெயர் கருவியாகலின் அதனை முற்கூறாதது முறையன்று. எண்ணு முறையும் போல்வனவற்றால் ஒரு பயனின்மையின் அவற்றை வகையுட் சேர்த்துக் கருவிசெய்தல் பயனில் கூற்றுமா றறிக. போலியெழுத்தென வொன்றில்லை யென்பது தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுட் காண்க' என்று சிவஞானமுனிவர் மறுத்துரைத்தனர். முனிவர் பிறாண்டும் மறுத்துரைத்தவெல் லாம் இப்பெற்றியவாதல் காண்க.

இஃதிவ்வாறாகவும், மாதவச் சிவஞான சுவாமிகளுக்குப் பரிந்தெழுந்த திருவாளர், சிதம்பரராமலிங்க பிள்ளையவர்கள் சுவாமிகளின் கருத்தின்னதென அறியகில்லாராய் "வைத்திய நாத நாவலர் இலக்கணவிளக்கச் சூத்திரமியற்றும்பொழுது தம் மைத் தொல்காப்பியரையும் பவணந்தியாரையும் சேர்த்து உருக்கிவார்த்த பிண்டமாகவும், உரையியற்றும்பொழுது தம்மை இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் மயிலைநாத ரென் னும் இவ்வனைவரையுஞ் சேர்த்து உருக்கி வார்த்த பிண்ட

மாகவும் பாவித்துக்கொண்டாரென்பதே பெறப்படுவதாம்" என்றும், "பிறவுரையாசிரிய ருரைப்பகுதியை அவ்வாறே எடுத்தமைக்கப் புகுவார் ஒருவர் தம்மைப் படர்க்கையிற் கூறுதல் பொருந்துமேயன்றித் தன்மையிற் கூறிச்செல்லுதல் பொருந்தாதென்பது யாவரும் எளிதின் அறிவதொன்று" என்றும் இங்ஙனம் முன்னொடு பின் மலையத் தமக்குத் தோற்றியவாறெல்லாம் கூறிச்செல்வாராயினர். பிள்ளையவர்கள் இலக்கணவிளக்கவுரையாளர் படர்க்கையிற் கூறுதல் பொருத்த முடைத்தென்பதற்குக் கூறுங் காரணங்கள் தொல்லாசிரியர் பல்லோர் கொள்கைக்கும் முரணுகி வழுப்பட்டொழிதலின் அவை அறிவுடையோர் எவரானும் ஏற்றுக்கோடற்பாலவல்ல என்க.

பிள்ளையவர்கள், அவர் படர்க்கையிற் கூறுவதே பொருத்தமென்று சாதிக்கப் புக்கதனைக் கைவிடுத்து, அவர் பிற ஆசிரியரெல்லாரையுஞ் சேர்த்து உருக்கிவார்த்த பிண்டமாகத் தம்மைப் பாவித்துக்கொண்டாரென்று தாம் குறிப்பிற் கூறியதனை வெளிப்படுத்துரைப்பாராய் 'வைத்தியநாத நாவலர் கல்வியறிவு சிறிதுமில்லாதவர்; உன்மத்தர்; அவர் ஒரு நூலாதல் உரையாதல் இயற்றினரல்லர்' என்று புகன்றிருப்பாரேல் ஓரோவழி அவர் தாமறிந்த உண்மையைக் கரவின்றி யெடுத்துரைத்தனரென்று கருதுதற்கிடனுண்டாகும். ஆயின், அப்பொழுது, "திருவாரூரிற் றிருக்கூட்டத்திற், றமிழ்க்கிலக்காகிய வயித்தியநாதன், இலக்கணவிளக்கம் வகுத்துரை யெழுதினன்" என்று வைத்தியநாத நாவலரைப் பிரமாண ஆசிரியராகக் கொண்டு புகழ்ந்தெடுத்துரைத்த சுவாமிநாத தேசிகரையும், இலக்கண விளக்கம் என்பது வைத்தியநாத நாவலரால் இயற்றப்பட்டதொரு நூலெனக்கொண்டு அதற்கு 'சூறாவளி' யென்னும் பெயரால் மறுப்புரை யெழுதிய சிவஞான சுவாமிகளையும் வரம்பின்றிப் புறம்பழித்தனராவர். சுவாமிநாத தேசிகர் யாதொன்றும் பயனின்றி வாளாகூறுரென்றும், சிவஞானமுனிவ ரெழுதிய மறுப்புரையில் அணுத்துணையும் மறுவிருத்தல் காணலாகாதென்றும் கொண்ட பிள்ளையவர்கள் முடிவின்கண் எவ்வழியினும் அவ்விருவர் கொள்கையுடனும் மாறுபட்டு அவர்களைப்

புறக்கணித் தொதுக்குதலாகிய குற்றத்தினின்றும் தப்புதற்கு வழியின்றி யிடர்ப்படுவோராயினமை காண்க.

இனி, " இலக்கணவிளக்க வுரையாளர் யாரென்றெழுந்த வினாவுக்கு இன்னாரென்று விடையிறுப்பதன்றி வேறுவரென்ற அளவிற் கூறிவிடுத்தல்.........செப்புவழூவுமாயிற்று ' என்பது போல்வன இலக்கணவறிவுடையா ரொதுக்கற்பாலவாகலின் பிள்ளையவர்கள் அவற்றை அயர்த்தெழுதிவிட்டனர்போலுமென விடுத்தலே சாலுமென்க.

' அரியகற்றுசற்றார் கண்ணுந் தெரியுங்கா, லின்மையரிதே வெளிறு' என்றபடி எத்துணைப் பேரறிவுடையாரும் ஒரோவழி உண்மையுணரமாட்டாது திரியக்கூறுதல் இயல்பேயென்பதும், அதனை ஒருவர் வெளிப்படுத்துரைத்தலால் அப்பேரறிவுடையார் பிறவாற்றானெய்திய பெருமைக்கு யாதோ ரிழுக்குமின்றென்பது தும் ஓராமல் 'பெரியாரைப் பழித்துவிட்டனர்' என அலர் தூற்றி யெழும் இயல்புடையார்க்குத் திருவாளர் பிள்ளையவர்கள் போல்வார் அறிவுகொளுத்தல் கடனுமன்றித் தாமே அந்நெறியைப் பின்பற்றி யொழுகல் அறிஞரால் விரும்பத்தக்க தன்றாகும்.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

---

# நூலாராய்ச்சி

## IV

1 மந்திபோற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பய னறிகிலா
அந்தகர்க் கெளியேனலேன் திருவாலவாயர னிற்கவே.

2 பொங்குநூல் வழியன்றியே புலவோர்களைப் பழிக்கும்பொலா
அந்தகர்க் கெளியேனலேன் திருவாலவாயர னிற்கவே.

சமணர், சாக்கியர் இவர் சமயப் பெருக்கைக் கண்டித்து, சைவசமயக் கொள்கையை நிலைநாட்டி, வழுதியைப் புறசமயப்

பற்றினின்று மீட்டுமாறு சென்ற ஞானசம்பந்தர் மாபெருந் தேவி 'பானல்வா யொருபாலன்' என்று தன்னைக்கண்டு தன் தகைமையை ஐயுறுவண்ணம் பாடிய திருப்பதிகத்தில் மேற் காட்டிய அடிகள் வந்துள. சமணர் ஆரிய செந்தமிழ்ப் பய னறியாதவர்கள். 'பொங்குநூல் வழியன்றியே புலவர்களைப் பழிக் கும் பொல்லா அந்தகர்கள்' என்ற கூற்றுக்கள் உண்மையோ, சமயப் பகைமை கொண்டு சீற்றமிஞ்சிய தேற்றச் சொற்களோ என்பன ஆராயற்பாலவாம். "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாகும்" என்று அருளிய அப்பர் மனப்போக்கிற்கும் ஞான சம்பந்தர் மனவெரிச்சல் கொண்டருளிய வாசகத்திற்கும் உள்ள வேறுபாடு வெள்ளிடை மலைபோல் விளங்கும். பன்னிரு நூற் றாண்டுகளின் முன்னர் புறச்சமய வெறுப்பு மிகுதியாயிருத்தல் வியப்பன்று. தஞ்சமயம் பெரிதென்று புறச்சமயங்களை வசை மொழிகளாற் கண்டிக்கும் வழக்கம் இன்றும் நிலவுதலைக் கண் கூடாகக் காண்கின்றாம். நாகரிக வளர்ச்சியால் சமயப்போர் குன்றி வருகின்றது. எம்மக்களும் கடவுள்தம் மக்களாயின் இச்சமய வேறுபாட்டால் ஐக்கியந் தொலையக் காரணமில்லை. படைப்பில் மக்கள் அறிவில் வேறுபாடுடையர். அவரவரறிவிற் கியன்றவாறு கடவுளை நினைத்து வழிபடுகின்றனர். இதற்காக வேறுசமயக் கொள்கைகளை நிந்தித்து அதனையும் அதனைப்பற்றி யொழுகுவாரையுந் துன்புறுத்தல் எவ்வாற்றானும் ஒவ்வாத நடையென்பதை இக்காலத் தறிஞர்கள் ஏற்காதிரார். மதமிஞ்சி னால் நாக்குளறும் என்பது இயற்கையன்றோ? தத்தஞ் சமயக் கொள்கையின் சிறப்பைப் பிறருக்குப் போதித்தல் பிறர்க் கெனவே வாழும் பெரியார் செய்கையாம். தம்மினுஞ் சிறந்த அறிவொழுக்கவாற்றல் வேறெம்மக்கட்குங் கிடையாதென்று தம் மேம்பாடு கூறுபவர் தம்நயமே நாடுந் தறுகணராவர். இது நிற்க.

சமணரை வெறுப்பதற்குக் காரணமென்னை? சேனன், நந்தி என்ற பெரும் பெயர்களை இழித்துக் கூறுவதேன்? "ஆக

மத்தோடு மந்திரங்களமைத்த சங்கத பங்கமா பாகதத்தோ டிரைத் துரைத்தசனங்கள் வெட்குறுபக்கமா''புளர். ''வேத வேள்வியை நிந்தனை செய்துழ''லுவர். ''மறைவழக்க மில்லாத மாபாவிகள்''. ''அந்தணாளர் புரியுமருமறை சிந்தை செய்யா வருகர்''. ''அழலதோம்பு மருமறையோர் திறம் விழலதென்னு மருகர்''. இவற்றால் அறியற்பாலது ஒன்றும். வடமொழி நூல் பார்ப்பார் கொள்கையைத் தழுவாமல் அதன்கணுள்ள குறை கொடுமைகளை எடுத்தோதியவர் சமண் சாக்கியராவர். தருணம் பார்ப்பார் பெருமையை உள்ளவாறு விளக்கவந்தவர் இவரே யாம். ஆதலால் இவரை யொழித்தல் எம்கடமையேயாம் என் றல் ஈனர் செய்கையன்றோ?

சமணர் சாக்கியர் யாவர்? இந்நாட்டிலுள்ளாரே. புறநாடு களினின்று வந்து புகுந்தவரல்லர். இவர்களைப்பற்றி மூவர்யாது கூறியுளர்? 'உடை துறந்தவர்கள்' 'முடைதுவராடையர்,' 'வெற்றரையுழல்வர்,' 'ஊத்தைவாயர்,' 'அறங்காட்டுவர்,' ''தொக்கபீலியர்,'' ''தடுக்குடுத்துத் தலையைப்பறிப்பார்,'' ''கோசரங்கொள்ளியர்,'' ''மண்டைகையேந்தி மனங்கொள்கஞ்சியூணர்,'' ''அறிவில்சிறு தேரர்,'' ''சாவாயும் வாது செய்சாவகர்,'' ''கஞ்சிகாலையுண்பார்,'' உருவ நீத்தவர்,'' ''நோம்பலதவ மறியாதவர் நொடிந்த மூதுரைகொள்கிலா முதல்வர்,'' ''அயமுக வெயினிலையமணர்,'' ''நயமுகவுரையினர்,'' ''அற்றமறையாவமணர்'' ''மாசுடைமேனிவன் சமணர்,'' ''கஞ்சியுங்கவள முண் கவணர்,'' ''கடுக்கடின் கழுக்கள்,'' ''இலைமருதே யழகாக நாளுமிடுதுவர்க்காயொடு சுக்குத்தின்னும் நிலையமண்தேரர்,'' ''குற்றுடுக்கையர்,'' ''அடைகையர்,'' ''காசைபோர்க்குங் கலதிகள்,'' ''குளித்துணவமணர்,'' ''பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள்,'' ''வீங்கியவுடலினர்,'' உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி பறித்தலும் போர்த்தலும்'' செய்பவர், ''கையிலுண்டு குவிமுலையார் தம்முனே நாணமின்றி யுண்டியுகந்தமணே நின்றார்,'' ''கருகுமுடலார் கஞ்சியுண்டு கடுவே தின்று உருகுசிந்தையில்லார்,'' ''கோசாரக் கொச்சைபுலால்

நாற வீருரிவை போர்த்துகந்தார்,'' 'குரத்திகள் பேணார்
தூமெய் மாசுகழியார்,'' "கடுநோன்பு மேற்கொள்ளும் பாவி
கள்,'' "உறிபுல்கிய கையர்,'' "சாதியினீங்கியவர்,'' "கண்ட
நூலருங் கடுந்தொழி லாளரும்,'' "எண்டிசையுமில்ல தொரு
தெய்வமுளதென்பர்,'' "கஞ்சிநாட்காலே யூணாப்பகலுண்டோது
வோர்,'' "வேதநெறி, தத்துவமொன் றறியார்,'' "ஓது
மோத்தையுணரார்,'' "மதிகேடர்'' "விடக்கினை யொழித்த
வர்,'' "கையெலாம் நெய்யாய் கழுத்தேகிட்டக் கானிமிர்த்து
நின்றுண்ணுங்கையர்,'' "செதுமதியார் செதுகருமனத்தார்,
கொது கருக்கண்ணிமேனான்பிகள்,'' 'திரள்திரைக் கவளந்திணிக்
குஞ் சமண்பிரட்டர்,'' "குறியறியாது நின்று கண்டதே கருது
வார்,'' "சினைபொதிந்த சீவரத்தர்,'' "எக்கர்,'' "பொக்கர்,''
"பெரியவாகிய குடையும் பீலியுமவை வெயிற்கரவாக் கரியமண்
டை கையேந்திக் கல்லெனவுழிதருங் கழுக்கள்,'' "கழியருகு
பள்ளியிடமாக வடுமீன்கள் கவர்வாரும், வழியருகுசார வெயி
னின்றடிசிலுள்கிவருவாரும் பழியருகினார்,'' "புற்றேறியுணங்கு
வார் புகையார்ந்த துகில்போர்ப்பார்,'' "ஒள்ளியர் தொழுதெழ
உலகினிலுரை செயுமொழிபல கொள்ளியகளவினர்,'' "கூறை
களைந்து கூப்பிலர் செப்பிலர்,'' "பொய்யினானூல் ஆக்கிய மொழி
யவை பிழையவை,'' "துப்புரவொன்றிலா வெற்றரையர்,''
"பாறு புத்தருந் தவமணி சமணரும் பலநாள் கூறிவைத்ததோர்
குறியினை பிழையெனக் கொண்டவர்,'' வெஞ்சொல் தஞ்சொ
லாக்கி நின்ற வேடமிலாச் சமணும் தஞ்சமில்லாச் சாக்கியரும்,''
"மாபதமறியாதவர் சாவகர் சாக்கியர்,'' "கடுக்கள்தின்று கழி
மீன்கவர்வார் கண்மாசுடம்பினர்,'' "விருதுபகரும் வெஞ்சொற்
சமணர் வஞ்சச் சாக்கியர்,'' "தட்டிட்டே முட்டிக் கைத்தடுக்
கிடுக்கி நின்றுணாத் தாமேபேணாதே நாளுஞ்சமண்,'' "மலிமரு
தம் பூப்புட்டத்தே யட்டிட்டுப் புதைக்கு மெய்க்கொள்புத்த
ரும்,'' "தாருறு தட்டுடைச் சமணர்,'' "தாறிடுபெண்ணைத்
தட்டுடையாருந்தா முண்ணுஞ் சோறுடையார்,'' "பிண்டமுண்
ணும் பிராந்தர்,'' "நகுவன சரிதைகள் செய்துழல்வார்,'' "பா
சுரவினைதரு பளகர்கள் பழிதருமொழியினர் நீசர்''.

"கூட்டிஞர்கிளி யின்விருத்த முரைத்ததோரொலி யின்றெழிற்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெலு மெக்கர்தங்களைப் பல்லறங்
காட்டியேவரு மாடெலாங்கவர் கையரைக்கசி வொன்றில்லாச்
சேட்டைகட் கெளியேனலேன் திருவாலவா யரனிற்கவே."

மேலெடுத்துக்காட்டிய சீரடிகளால் அறியத்தக்கனபல. மூவலயமெலாங் கைகூப்பித் தொழத்தக்க எவ்வுயிரையுங் கொல்லா விரதம் பூண்டவர் சமணரென்பதும், ஆ, மா, ஆடு, நரன் இவற்றை வதைசெய்து அவி சொரிந்து ஆயிரம் வேட்டலால் நலனிலையென்று பறையடித்தது மன்றித் தம் நடையினால் அதை யுலகுக்குக் காட்டியவ ரவரென்பதும், நீரிலும் நிலத்திலும் மேனியிலும் வாயிலுமுள்ள சிற்றுயிர் கொலையுணுவாறு தட்டிடுக்கிப் பீலி சுமந்து தரை பெருக்கிப் பல் விளக்காது மேனிகுளித்துக் கழுவாது பகலில் நின்று கையிலுண்டு விழுமிய தவவொழுக்கந் தழுவிய துறவிகள் அவர்களென்பதும், பன்மொழிகளும் பயின்று பன்னூல்களை யாக்கிப் பலவுண்மைகளை விருத்தமூலமாகப் பலருமறியுமாறு செய்தவரவரென்பதும் தெற்றெனத் தெளிவாம்.

ஆரியஞ் செந்தமிழ்ப் பயன் யாது? தனக்குவமை யில்லாதானை யறிதலும் அவன் தாளை வணங்குதலுமே அம் மொழிகளின் பயனும். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழா ரெனின்" என்றார் நாயனாரும். வேதம் பகரும் பல கடவுள ரன்றி தெய்வமொன்றினையே ஏத்தி வணங்கிய தமிழ்ச் சமணரை "ஈசனெமையாளுடைய வேந்தை பெருமானிறைவனென்று தனையே பேசுதல் செயாவமணர்" என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? யாம் தொழுங் கடவுளரை வணங்காதவர் பாவிகள் எனும் கூற்று நூல் பல பார்ப்பார் கூற்றாமோ? பொலி கழலடியிணைகாணுஞ் சித்தமற்றவரென்று கூறுதல் பொருந்துமோ? "அந்தரஞானமெல்லா மவையோர் பொருளென்னேல்" என்றது தம் சமயக்கொள்கையினைக் கைவழுவாதுக் கடைப்பிடித்தல் கருதியன்றோ? பிண்டியும் போதியும் வணங்குபவரென் றிழித்துரைத்தல் "ஆகமச்செல்வனாரை அலர் தூற்றுதல் காரண" மன்றோ?

வடமொழியும் வேதமும் மக்களனைவர்க்கும் பொது. ஒரு வகையினர்க்குரிய தென்றல் தவறு. கடவுளொன்றே. குறிக் கோள் கோடியல்ல. ஞானமுங் கல்வியுமவ னறிதற்பொருட்டே. ஒழுக்க முயிரினு மோம்பத்தக்கது. ஒன்றனுயிர் செகுத்துண் ணாமை நன்று. விருந்தோம்பலே வேள்வி யாம். அவிசொரிதல் வீண். உலகம் பழித்த தொழித்துவிடல் தகைமை. மக்களுள் பிறப்பினாற்சாதி வேற்றுமை கிடையாது. சிறப்பு செய் தொழி லால். இன்னோரன்ன உண்மைகளைப் பொதிந்த நூல்கள் பலவாக்கி யளித்தவர் சமணரெனப்படுவார். கருணைவடிவாயுள்ள இவரை சகல மணமும் பொருந்தியவரென் றழைத்த லன்றோ தகும்? அஃதன்றி நீசர், செதுமதியர், மதியிலார், மதிகேடர் எனப் பலவாறு தூற்றுதல் புலவர் தொழிலாமோ?

"எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா, முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

இஃது உண்மையாயின், தொன்றுதொட்டு காவியங்கள், நிகண்டுகள், இலக்கணங்கள், பல வொழுக்கநூல்கள் இவற்றினை யாக்கித் தமிழணங்கை நலனுறச்செய்த காமவெகுளிமயக்கின் வெற்றிவீரர்களாகிய சயினரைப் பிறர் சூழ்ச்சி வலைப்பட்ட தமிழ் மக்கள் தம்மினமறியாம லொறுத்தலும் அந்தகரென்று வைத லும் நாகரிக வொழுக்கமாமோ?" பெயக்கண்டும் நஞ்சுண்டமை வர்" சைவராயின், மதம்பிடித்து மக்களை தெய்வமெனுங் குய்யமாமக்கள் வஞ்சனையால் உற்றுருறவினரை ஒழித்துச் செற் றாரைச் சார்ந்து யானைதன் தலையில் மண்கோலியிடுமாறு தந்தலை மேல் மண்பெய்து தம் மியற்கை மேன்மையினை யிழந்து தெவ் வர்க்கு என்று மீளா ஆளாகிய அந்தகச்செயல் பரிதாபம் பரி தாபம். எச்சமயமும் விரும்புங்குறி ஒன்றே.

"ஞாலநின் புகழே மிகவேண்டும்," பல்
கோலமா யுறையுமெம் மாதியே.

மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, B. A., L. T.

# பிராணாயாமவிதி

## சிவமகா புராணம்

சநத்குமாரமுநிவரை நோக்கி, வியாசமுநிவர் அறு குணச்செல்வரே தியானயோக கருமத்தை விளக்கமாய்க் கேட்க விரும்புகிறேன் என்று வேண்ட வியாசரை நோக்கி சநத்குமாரர் கூறத் தொடங்கினர். வியாசமுநிவரே! முன் ஞளில் நந்தியெம்பெருமானுக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் யான் கூறுகிறேன். பிராணாயாமம், தியானம், பிரத்தியாகாரம், தாரணை, யோகம் என ஐந்து வகையாய்ச் சொல்லப்படுகின்றன. பிராணாயாமம் என்பது பிராணவாயுக்களை இழுத்து ஓரிடத்தில் நிறுத்துவதாம். அஃது உத்தமம் மத்திமம் அதமம் என மூன்று வகையாகும். அம் மூன்றனுள்ளும் மந்த மத்திம உத்தம மென மும்மூவகை யாம். அவற்றுள் பிராணாதி வாயுக்களைப் பன்னிரண்டு மாத்திராகாலம் நிரோதம் செய்கிறதென்றும், அதற்கு உத் காதமென்னும் (பன்னிரண்டு எழுத்துக்களை யுச்சரிக்குங்காலம்) அதுவே மந்த மெனவும் யோக சாத்திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. இதில் மத்திமம் இருபத்தி நான்கு மாத்தி ராகாலம், பிராணன் முதலிய வாயுக்களை ஓரிடத்தில் நிறுத்த வேண்டும். முப்பத்தாறு மாத்ராகாலம் பிராணன் முதலிய வாயுக்களை நிறுத்துதல் திருருக்காதம் என்றும், உத்தம பிராணாயாமம் என்றும் சொல்லப்படும். இவ்விதமான பிராணா யாமங்களை அநேக முறை செய்வது யோகங்களின் பேத மாய்ச் சொல்லப்படும். இதனைச் சிறிது சிறிது காலமாய் அப்பியசித்துப் பழகிக்கொண்டு வரவேண்டும். இந்த விஷயத் தில் எவனுக்கு அதிகமான வழக்கமிருக்கிறதோ, அவனுக் குச் சிங்கங்கள், யானைகள், புலிகள், மான்கள், பட்சிகள், முதலைகள் முதலிய ஜந்துக்கள் அடங்கி வசியமாகும். இப் படிச் சர்வ ஜந்துக்களையும் சுவாதீனப்படுத்திக் கொள்வதே வசித்துவம் என்று சொல்லுவார்கள். இவ்வித பிராணாயாமத்தை

ஒருமுறை செய்தாலும் ஜெனனம் எடுத்தது முதல் செய்த பாவங்கள் தொலையும். அக்நிஷ்டோமம் முதலாகிய யாகத்தினாலும் கங்கா புண்ணிய தீர்த்த ஸ்நானங்களாலும், ஏகாதசி விரதங்களாலும், தபோ நியமங்களாலும், ஸர்வ சாதனங்களாலும், இந்தப் பிராணாயாமத்தை யனுஷ்டித்தவர்கள் அடையும் பலனை யடைய முடியாது. பிராணாயாமத்தினாற் பாவங்களை யொழித்துத் தாரணையினால் மனதை நிறுத்தி, பிரத்தியாகாரத்தினால் இந்திரியங்களை விஷயங்களில் செல்லாமல் அடக்கி, தியானத்தினால் எப்பொழுதும் அழிவில்லாததாய் நாசமற்றதாய், பரிபூரணமாய், தேசோமயமாய் விளங்கும் பரப்பிரமத்தைத் தைலதாரையைப் போல் அவிச்சின்னமாய்த் தியானிப்பது யோகமென்று சொல்லுவார்கள். இவ்விதமாய் யோகம் செய்வதற்குப் பலவகையான ஆசனங்களிருக்கின்றன. அவற்றுள் சொஸ்திகம், பத்மாசனம், பத்திராசனம், வீராசனம் முதலியனவாம். இரண்டு முழங்கால்களையும் சமமாகச் செய்து இரண்டு பாதங்களையும் தொடைக்குக் கீழாகச் செய்து நேராக உட்கார்ந்து மனது விஷயங்களில் பிரவர்த்திக்காது நிறுத்தித் தியானிப்பதை சொஸ்திகாசனமென்று சொல்லுவார்கள். பத்மாசனமிட்டு யோகத்தை யப்பியசிப்பவன் விஷரோகத்தையொழிப்பான். இவ்விதமாக ஆசனபேதங்களை முறைப்படி யறிந்து இந்திரியங்களை விஷயங்களிற் பிரவர்த்திக்க வொட்டாமல் நிறுத்திக் கல்லைப் போல் அசையாமல் நின்று, தமோகுணத்தை ரசோ குணத்தால் மறைத்து, ரசோகுணத்தை சத்துவகுணத்தால் மறைத்து, நாவையும் அசைக்காமல் நிர்ச்சலமாய் முற்கூறிய பிராணாயாமங்களைச் செய்வதே நான்காவதாகிய மோக்க புருடார்த்தத்திற்குச் சாதகமாம். இந்திரியங்களை விஷயங்களில் பிரவேசிக்காமல் தடுத்தல் பிரத்தியாகாரமாம். பன்னிரண்டு பிராணாயாமங்கள் கூடிய காலம் தாரணை. அந்தத் தாரணையையே சிறிது சிறிதாக உயர்த்திப் பழகியவன் பரமாத்மாவைத் தரிசித்து, பிறவியை யொழிப்பான். இவ்விதமாகத் தாரணை விசேடமாகப் பழகிய பின்னர் அதனை மெல்ல விடுதலே பிரத்தியாகாரமாம். பிராணவாயுவைத் தகைதலினாற் பிராணயாமமென்றும், அந்த

வாயுவை யோரிடத்துத் தரித்தலால் தாரணையென்றும் விஷயங்களை நிக்கிரகித்தல் பிரத்தியாகாரமென்றுஞ் சொல்லப்படும். இம்மூன்றுஞ் சேர்ந்தவிடத்து யோகசித்தி யுண்டாகும். அந்த யோகசித்தியால் ஆத்மாவைச் சலத்திற் சந்திரன் போலப் பார்ப்பான். அப்படிப் பார்ப்பதால் மோக்ஷமுண்டாகும். இந்தத் தத்துவலட்சணங்களைச் சத்பாத்திரனுக்கே யுபதேசிக்கவேண்டும் என்று எனக்கு நந்திதேவர் கூறியுள்ளாரென, சநத்குமார முனிவர் வியாசமுனிவருக் குரைத்தனர்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கி
உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

மு. அப்பாவு பிள்ளை,
வாங்கல்.

---

# ஆதிசைவர் பெருமை

முப்பொழுதுந் திருமேனி தீண்டும் பெருமை இவருக்கே உரியது. இவரே சிவாகமத்தில் விதிக்கப்பட்ட வழியொழுகுபவர். வைதிகவழி நின்றொழுகும் சுமார்த்தப் பிராமணர்களோடு வேறுபட்டு நிற்பவர். இவருக்கே பிறர் உண்டியும், உறையுளும், உறையுங் கொடுத்தல் கடமையாகும். இவரே நற்புருடராவர். பூணூ லணிந்து பேருக்குப் பிராமணர் எனத் திரிகிறவர்களுக்குத் தற்காலத்தில் அளித்துவரும் அன்னதானம் பயன்தரத் தக்கதன்று. பாவ மூட்டையைக் கட்டிக் கொள்வதேயாகும்.

இதற்கு உதாரணம் சிவமகா புராணத்தில் பின் வருமாறு காண்க.

அந்தகேசுவர நகரத்திலிருந்த நீதி நெறி தவறாத பத்திரனென்னும் அரசன் வேதியருக்கு நாடோறும் உண்டியளித்து வருவதாக உறுதி பண்ணிக்கொண்டு நாளொன்றுக்குப் பல்லாயி

ரம் அந்தணருக்கு அறுசுவையோடு கூடிய உணவை விருப்புடன் அளித்துவருகையில், சிவபெருமான் ஒருநாள் அவ்வரசன் முன் தோன்றியருளி அவன்கையில் ஒரு கொடியினைக் கொடுத்து, அரசனே! இதனை உனது உணவுப் பந்திச் சாலையில் கட்டிவைத்து உன் கருத்துப்படி உணவளித்துவரக் கடவை; அவ்வாறு உணவு அளித்து வருகையில் எவரேனும் ஒரு நற்புருடர் அவ்வுணவை உண்ணுவரேல் அன்று நீ நாட்டிய கொடிவிழும். அவ்வாறு அது விழாவிடின் அன்று உன்னுணவை நற்புருடர் உண்ண வில்லையென்று உணர்ந்துகொள் எனக் கூறி மறைய, அரசன் அப்பெருமான் ஆஞ்ஞையின்படி அவ்வாறே அக்கொடியினைத் தனது உணவுச் சாலையில் நாட்டி முறைப்படி பிராமணர்களுக்கு உணவு கொடுக்க ஆரம்பித்து அப்பொழுது நேரிட்ட ஓர் ஆதி சைவருக்கு உணவளிக்க, உடனே அக்கொடி கீழேவிழுந்தது; பத்திரன் அக்கொடியின் வரலாற்றினை ஆண்டிருந்த பிராமணர்களுக்கு இஃதென்னென வினவ, பிராமணர்கள், நாங்கள் யாவரும் உண்ணுமுன்னமே பசிதனுகிய அவ் ஆதிசைவருக்கு உணவளித்ததால் கொடி விழுந்ததேயன்றி, சிவபெருமான் கூறியபடி நற்புருடர் உண்ண விழுந்ததன்று என, பத்திரன் பிராமணர்களே! நீங்கள் சொல்வது உண்மையாயின் அதனையுஞ் சோதிக்கலாம் என்று, மீண்டும் கொடியினை நாட்டி, வந்த பிராமணர்களுக் கெல்லாம் சிலநாள் உணவளித்து வந்தும் அது விழாமைகண்டு, அரசனும் பிராமணர்களும் முன் கொடி விழுந்தது ஆதிசைவர் உண்டதனுலேயே என்று தேர்ந்து தெளிந்தார்கள்.

மேற் கூறியவாற்றன் ஆதிசைவர்களே சிவ பூசனைக்குரியா ரென்பதும், பிறமக்களுக்குத் தீக்கை முதலிய சடங்குகளைச் செய்துவைக்கும் பெற்றியுடையா ரென்பதும், பிராமணச் சூழ்ச்சி நெடுங் காலத்திற்கு முன்னமேயே இருந்து வந்த தென்பதும், அவர் பிற மக்களை ஏமாற்றித் தமது வயிறு நிரப்பி வருகின்றன ரென்பதும் வெள்ளிடைமலைபோற் றெள்ளிய வாகும்.

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே."

சைவன்.

---

# சிங்கைப் பதிற்றுப்பத்தந்தாதி

## காப்பு

பாரோங்கு புகழ்மணக்கும் சிவசிங்கா புரிப்பதிற்றுப் பத்தந்தாதி
நாரோங்கு மாலைசிவ ஞானவள்ள லடிபுனைய நலமேநல்கும்
காரோங்கு கண்டத்தெங் கண்ணுதலார் களிப்பநகை காட்டுங்காதற்
காரோங்கு மடியவரைக் காக்கவரு பேரருளாங் களபந்தானே.

## நூல்

சேருங் கல்வியுஞ் சீரிய செல்வமும்
பாரும் விண்ணும் பகருநற் பண்புமே
யாருந் தேடிவந் தின்புறுஞ் சிங்கையி
லாரு மன்பொடு மையற்றொ ழுவார்க்கே. க

கேடு நீங்கிடக் கேண்மையு மோங்கிட
நாடு செய்திட்ட நற்றவத் தாற்சிங்கை
பாடு மன்பர்க்குப் பாலிக்க நல்லரு
ளோடு முற்று ணுயர்சிவ ஞானமே உ

ஞான மாகிய ஞாயிறு தோன்றிட
யானு முய்ந்திட ஞானபோ தத்திற்குத்
தேனுங் கைத்திடத் தேர்ந்துசிங் கைச்சைவ
பானு செய்தது பாடியம் பண்பதே. ௩

பண்புற் றோங்கும் பலவயல் சூழ்ந்திடும்
தண்பொற் கொன்றை யந்தார னருள்மணி
நண்புற் றேநமக் காரருள் நல்கிடும்
எண்பெற் றசிங்கை யெய்துவம் வம்மினே. ௪

வம்மின் நாமவன் வார்கழ லேத்திடச்
செம்மை யாகிய செல்வ மருளிடும்
தம்மின் மிக்காரில் தன்மையன் சிங்கையில்
எம்மை யாளு மெழிற்சிவ ஞானமே. ௫

மேதை யோர்புகழ் மேவிய சிங்கையிற்
ருதை யார்கழல் தாங்கிப் பணிதலால்
பேதை மைக்குணம் பேருமி னிமையாம்
தீதைத் தீர்க்கத் திறனிது காண்மினே. ௬

காண்மின் சிங்கையிற் கைதொழு தேகழல்
பூண்மின் பூக்களாற் பூசித்துப் போற்றுமின்
பாண்பின் மிக்க சிவஞான மாதவ
காண்மி னென்றே கதறி யுருகுமே. ௭

உருகு சிந்தை யுரோமஞ் சிலிர்த்திடப்
பருகு வார்போலப் பாசமாய் நிற்பிரேல்
அருகு வநதவ னுளுவன் சிங்கையிற்
பெருகு ஞானவான் பேரரு ளாளனே. ௮

ஆளனே யருள் சிங்கை யமர்ந்தவ
காள கண்டன் கழலபணி காதல
நாளும் பத்தியாய் நண்ணினேன் பங்கயத்
தாளனே யெனைத் தாங்கிக்கொள் வாய்நீயே. ௯

வாயிலின் மொழி வாண்முகத் தேநீறு
தாயின் மிக்கதாம் தண்ணருள் மேனியான்
நாயி னேனையு நண்பொடு சிங்கையிற்
கோயில் கொண்டு குணந்தந்து காக்குமே. ௰

வேறு

காக்கும் புகழும் கனவருளும் கண்டார் மயங்கி யீடுபடும்
நோக்கு முடைய குருநாதா நோற்ற தவத்தில் விளையமுதே
தாக்கு மலத்தின் தன்மையுயிர் பதியின் தன்மை தமையுணர்த்தி
ஆக்க நிறையுஞ் சிங்கையுறை யன்பே ஞானச சிவவாழ்வே. ௰௧

வாழ்த்தும் பணிக்கா வாயமைத்தான் வணங்கத் தலையுந் தானமைத்தான்
தாழ்த்து மலமுந் தகர்ந்திடற்கே தகுந்த அன்பு தனையளித்தான்
வாழ்த்தி வணங்கி யன்புசெயும் வகையீ தென்றே சிங்கையினில்
பாழ்த்த சிந்தை மயக்கறுக்கும் படிகாண் பித்தான் பண்ணவனே.

பண்ணுற் பாடிப் பணிந்தெழுந்து பரிவாற் பதிசீர் பலநினைந்து
கண்ணுற் கால காலனுரு கண்டு கைகள் கனமலர்கள்
தண்ணார் தளிர்மெல் லடியிடுமெய்த் தன்மை வீடு தருமென்று
கண்ணார் சிங்கைச் சிவஞானம் கருணைக் குருவாய்க் காத்தனனே.

காத்தான் கருணை யுருவானன் கதிக்கு நல்ல வழிகாட்டி
யேத்து மடியார்க் கின்பருள வினைக்கி யிழுக்கு மெழிலுடைய
கூத்தன் பெருமை குறிக்கொள்ளக் கூறுசிவதத் துவவறிவை
யாத்த புகழான் சிங்கையுறை யிறைவன் ஞான முனிவரனே. ௰௪

வரமார் திருவள்ளுவ ரருளே வாய்க்க விளம்பு திருக்குறளைத்
தரமாய்க் குளத்தூர்ச் சோமேசர் தாட்குக் கதையால் விளங்கவெண்பா
உரமா லருளு முனீந்திரனே உறவே சிங்கைச் சிவஞானப்
பரமா வடியேன் பகர்மொழிகள் பண்பா லேற்றுப் பணித்தருளே.

பணிவார் பாவந் தீர்குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந் தாதியுரை
பணிவார் புகழான் பதம்தொழுதே பாடிச் சிங்கைப் பதியிலரு
ளணிவார் ஞான முனிப்பேரும் ஆதி யுயிர்கள் மலத்தன்மை
துணிவார் அடியே முய்ந்திடற்காத் தோற்று சீரார் பெரியவரே.

பெரியார் சிறியார் பொருளுடையார் பேதை யேழை யாவருக்கு
மரியார் திருமால் பிரமனுக்கும் அடியா ரன்பா லுருகுங்கால்
தரியார் சிவனு ரொருகணமும் தாங்கியருள்வார் எனச்சிங்கைப்
புரியார் புரியார் பேர்க்கருளைப் புரியார் புரிந்தா ரன்பனுக்கே.

அன்பர் பவங்கள் தொறும்செய்த அளவின் தவத்தின் பயனேயோ
என்பன் அடியார் துயர்நோக்கி யிரங்கி யளித்த அருளமுதோ
துன்பம் நீங்கச் சிவஞானம் சிங்கைப் பதியிற் றோன்றினதே
இன்பம் பெற்றே மினிப்பிறவோம் எய்தப் பெற்றோம் குருவருளே. ௰௮

அருளை நினைந்தே உருகாமல் ஐயோ காமன் வயப்பட்டு
மருளே கொண்டு கிடப்பேனை மறித்தாட் கொண்டுன் கருணையினால்
அருளி பதம்நா னடைந்திடற்கே யளித்தா யெனக்குச் சிவஞானம்
குருளை வாழ்காச் சிங்கையினில் கோவில் கொண்ட குருபரனே.

குருவே யடியேம் குறைதீர்க்கக் கூத்த னருளாற் சிங்கையினில்
உருவே கொண்டிற் றாலயத்தில் ஓங்கு மிணையில் பேரருளே
அருவே ஞான வடிவுடையாய் அன்பே யின்பச் சிவக்கொழுந்தே
கருவே புகுந்து கலங்குகின்றோம் காப்பா யெமக்குக் கதிதந்தே.

(தொடரும்)

சந்திரசேகரப் பாவலர்.

---

# மதிப்புரை

‘பவானிப் பதிற்றுப் பத்தந்தாதி’:—இது தேவாரம் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்களு ளொன்றாகிய திருநணாவில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான் மீது இயற்றப்பெற்ற வோரந்தாதி. இதைப் பாடினோர் அவ்வூருயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் திருவாளர் - கு. குமாரசாமிப்பிள்ளை யவர்கள்; வெளியிட்டோர் அத்தலத்துவதியும் சிவ ஸ்ரீ. சு. நடேச குருக்கள். நூறு பாட்டுக்களையுடைய விந்நூல் செம்பாகமான இன்றமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளது. சிவ பரம்பொருளின் முழுமுதற் றன்மையை வற்புறுத்துகின்றது. ஆசிரியருடைய சமய நூலாராய்ச்சியும் சைவசமயப் பற்றையும் நன்கு விளக்குகின்றது. பிரதி யொன்றின் விலை அணா 3. வெளியிட்டோரிடமிருந்து பிரதிகள் பெறலாம்.

---

**Printed at the Sivakami Vilasam Press, Published by V. Subbiah for the S. I. S. S. W. P. Soceity Ltd., 306, Linga Chetty St. Madras.**